உ
குருபாதம்
வாழ்க உலகெலாம் !

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 } விகாரி - சித்திரை 10—5—59 { இதழ் 6

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங்கு இலங்கொளி நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

கட்டுரை 4

(மலர் 18. இதழ் 5. பக்கம் 296 இன் தொடர்ச்சி)

இரண்டாவது அதிகரணம்

சிவ ஞான போதச் சிற்றுரையில் அதிகரணப் பகுப் புணர்த்தும் இடத்தில், 'தோற்றிய திதியே யொடுங்கியுளதாம் என்பது மூன்றதிகரணத்தை உள்ளடக்கி நிற்பதோரதி கரணம்' என்றுளது. பேருரையில் (மாபாடியத்தில்) 'மூன்றதிகரணத்தை உள்ளடக்கி நிற்பது' என்றது இல்லை. அங்கு இன்றேனினும், வேறிடத்தில் மூன்றதிகரணமாக

வைத்துப் போருள் செய்தலே மெய்கண்டதேவ நாயனூர் கருத்து என்பது முன்னர்க் கூறப்படும் வெண்பாக்களால் அறியக் கிடத்தலை விளக்கிற்று அப் பேருரை. அம் மூன்றும் வருமாறு :-

எதிர்மறையநுமானம்

க (அ) உலகம் உள்ளது ;
(ஆ) அது தோற்றம் உடைமையின் ;
(இ) யாது இல்லது ? அது தோன்ருது ;
(ஈ) முயற்கோடு போலும்.

உடம்பாட்டநுமானம்

உ (அ) உலகம் செய்வோனை (கருத்தாவை) உடையது ;
(ஆ) உள்ளதாய்க் காரியப்படுதலின்.
(இ) யாது உள்ளதாய்க் காரியப்படுவது ? அது செய்வோனை உடையது ;
(ஈ) குடம் போலும்.

உடன்பாட்டநுமானம்

ங (அ) உலகம் சங்காரகாரணனுல் உற்பத்தியாம்.
(ஆ) ஆண்டு ஒடுங்குதலின்.
(இ) யாது யாண்டு ஒடுங்கும் ? அஃது அதனில் உற்பத்தியாம் ;
(ஈ) மண்ணிற்குடம் போலும்.

இம் முப்பிரிவும் மூன்றதிகரணமாகும். இவற்றுள்,

முதலாவது :- 'திதி' என்பதாற் பெறப்படும் உள்ளதாதலைச் சாதிக்க நின்ற அநுமானம்.

இரண்டாவது :- 'தோற்றிய' என்னும் பிறவினை வாய்பாட்டாற் பெறப்படும் கருத்தாவைப் போதுவகையாற் சாதிக்க நின்ற அநுமானம்.

மூன்ருவது :- அக் கருத்தா யார் என்னும் அவாய் நிலையை நீக்குவதற்கு ‘ஒடுங்கியுளதாம்’ என்றதை எடுத்துக் கொண்டு கூறப்பட்ட அநுமானம். (இவை மாபாடியத்தில் உள்ளவாறே எழுதப்பட்டன.)

இங்ஙனம் முப்பிரிவுபடும் மூன்றதிகரணத்தைத் தன்னுட் கொண்டது, இரண்டாம் அதிகரண வாக்கியம். அஃதாவது இது :-

‘இனி இல்லதற்குத் தோற்றம் இன்மையின், உள்ள தற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின், ஒடுங்கின சங்காரத்தின அல்லது உற்பத்தியில்லை என்றது.’

இதில் ‘இல்லதற்குத் தோற்றம் இன்மையின்’ என்றுள்ள தொடர் ஓர் ஏதுப் பொருள்கொண்டதாகும். அதனால் சாதிக்கப்படுவது ஒன்று உண்டு. அதை உணர்த்தும் வாக்கியம் இதில் வெளிப்படையாயில்லை. சூத்திரத்தில் உள்ள ‘தோற்றிய திதியே ஒடுங்கியுளதாம்’ என்னும் இரண்டாவது அதிகரணப் பொருளின் விளக்கம் இது. இது மூன்று பிரிவுடையது. அம்மூன்றும் ஒவ்வோர் அதிகரணம். சொற்பல்காமைப்பொருட்டு அவற்றைச் சுருக்கிக் கூறியது இது. இவ்வுண்மையை இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே தெரிவித்தோம். அதை உட்கொண்டு ஆராயின், இது ‘திதி’ என்றதன் விளக்கம் என்பது தெரியும். தெரியவே அத் ‘திதியே’ (உள்பொருளே) என்றதன் பொருள் அமைந்த ஒன்று, இங்கு, இவ்வேதுவுக்கு மேற்கோள் (பிரதிஞ்ஞை) ஆதல் புலப்படும். அதாவது,

‘உலகம் உள்ளது’ என்பது.

‘இல்லதற்கு’ என்றதால் இவ்வாராய்ச்சி உள்ளதற்கு என்பதும், ‘தோற்றம் இன்மையின்’ என்றதால் உள்ள அது தோற்றம் உடையது என்பதும் பெறப்படும். படவே ‘தோற்றமுடையது உள்ளது’ என்றது அவ்வேதுவால் குறிக்கப்படுகின்றமை புலனாகும். அஃது உலகம் என்ற இடம் நோக்கிக் கொள்ளப்பட்டது.

'இல்லதற்குத் தோற்றம் இன்மையின் உலகம் உள்ளது' என்றது அம் மூன்று பிரிவினுள் ஒன்ருய் முதலதாகும்.

'உலகம் உள்ளது'' என்று சாதிக்கவேண்டுமோ எனலாம். உலகம் இல்லை என்று பொய் சொல்லுவோர் இருப்பின் அன்ரே உண்டு என்று உண்மை உரைக்க வேண்டும் ? காணப்படும் உலகம் இல்லை எனச் சொல்லு வோர் யார் ? இங்கு இவ்வாறு வினு நிகழலாம். நிகழ்வது முறையே. இதற்கு விடை இது :-

'உலகம் இல் பொருள், அவ்வுலகம் * தத்தம் சார்பிலே தோன்றி அழியும். அஃது இயல்பு. உலகம் தோற்றம் நிலை அழிவு ஆகிய முத்தொழிலை உடையது. உடையதாயினும் உள்ளதாதல் செல்லாது' என்று புத்தர் கூறுவர். அவர் கொள்கையை மறுக்கும் பகுதி இது. அதனுல் 'உலகம் உண்டு' என்று கூறவேண்டியதாயிற்று. எதையும் ஓர் ஏது இல்லாமல் மறுப்பது குற்றம். உலகம் உண்டு என்ப தற்கு ஏது யாது ? உள்ளதுதான் தோன்றும். இல்லாதது தோன்ருது. உள்ளதற்கு அன்றி இல்லதற்குத் தோற்றம் அமையாது. இவ் வுண்மையை 'இல்லதற்குத் தோற்றம் இன்மையின்' என்னும் ஏது வாக்கியம் உணர்த்துகின்றது. புத்தர் கொள்கை பொய்யாதலை 'இல்லதற்குத் தோற்றம் இன்மையின் உலகம் உள்ளது' என்னும் முதலாவது அநுமான வாக்கியம் உரைத்து, 'திதியே' (உள்பொருளே) என்னும் (சூத்திரக்) கூற்றை விளக்குவதுணர்க.

இரண்டாவது அதிகாணத்தின் முப்பிரிவுள் ஒன்ருன இம் முதற்பிரிவின் விளக்கம் :

புத்தர் தடை :- உலகம் இல் பொருளாய்த் * தத்தம் சார்பிலே தோன்றியழிதல் இயல்பு என்றலே அமைவுடைமை யின் அது மூவினையுடையதாயினும் உள் பொருளாதல் செல்லாது.

அதற்கு விடை ;- உலகம் இல் பொருள் அன்று. உள் பொருளே.

புத்தர் தடை :- உள்ளதாதல் யாங்கனம் ?

அதற்கு விடை :- இல்லதற்குத் தோற்றம் இன்மையின் (உள்ளதற்கே தோற்றம் உண்டாகலின்) உலகம் உள் பொருளே. இல் பொருள் அன்று, உலகிற்குத் தோற்றம் உளது.

முயற்கோடு இல் பொருள். இல் பொருளான முயற் கொம்பிற்கு முக்காலத்தும் தோற்றம் இல்லை. முயலும் கொம்பும் உள்பொருளே. தனித்தனி வெவ்வேறிடத்தில் முயலுக்கும் கொம்பிற்கும் தோற்றம் உண்டு. முயலுக்குக் கொம்பு இல்லை. அதனால், முயற்கொம்பு இல் பொருள். அதற்குத் தோற்றம் இல்லை. இல்லது தோன்றாது. உலகம் தோற்றம் உடையது. உலகம் இல் பொருளாயின் தோற்றம் கூடாது. தோற்றம் உடைமையால் உலகம் உள்பொருளே. முயலின்கண் கொம்பு இல்லை. இல்லாத கொம்புக்கு அங்குத் தோற்றம் அமையாது. அம்முறைமையால் நோக்கின் தோற்ற முடைய உலகம் உள் பொருள் ஆமே அன்றி இல் பொருள் ஆகாது.

* 'தத்தம் சார்பிலே தோன்றியழிதல்' என்றதன் விளக்கம் :- 'உள்ள பொருள் உண்டாக வேண்டுவதில்லை. ஆதலின், இல்லது உண்டாகும்; உள்ளது அழியும். இல்லாதவை தோன்றுங்கால், சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றியழியும். அவ்வாறு அழிவனவற்றுள் முற்கணத் தின்நின்று அழியும் பொருள் பிற்கணத்தின் தோன்றும் பொருட்குச் சார்பு ஆகும். ஆகலின், அவை அவ்வச் சார்பிலே, வித்தின் கேட்டின் முளைபோல் தோன்றும். விதைக் கேடு ஆகிய சார்பில் முளைத்தோற்றம் நிகழ்கின்றது. முளைத் தோற்றத்துக்கு வித்துக்கேடே சார்பாயிருந்து நிகழ்த்து கின்றது. வித்தைக் கெடுக்கவும் முளையைத் தோற்றவும் ஒரு கருத்தா வேண்டா. வித்துக்கேடு சார்பாக முளை தோன்றும். இதுவும் இன்னவும் சார்பிற்றோற்றம் ஆம். இச் சார்பிற்றோற்றம் சவுத்திராந்திகர் முதலியோர் கொள்கை.

(தொடரும்)

உ

சிவமயம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குறுக்கை

ஸ்ரீ வீரட்டேசுவரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகத்தில்

25-ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

திருப்பணிப் பாராட்டுரை

தருமைக் குருநாதர் பலருடைய பெருமையும், அருமையும், தவமும், சிவஞானமும், திருவருட் பொலிவும் எல்லாம் ஒருங்கு இயைந்து விளங்கும் குருமகாசந்நிதானம், பீடாரோகணம் செய்தருளிய காலம் முதல், உலகெலாம் வியந்தும் நயந்தும் போற்றும் அரும்பெருந் திருப்பணிகளைச் செய்வித்து வருவது உள்ளத்தே உவகையை நிறைவிக்கின்றது.

" எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல் "

என்னும் பொய்யாமொழிக்கு மெய்யாம் இலக்காகத் திகழும் குருமணியை நினைக்குந்தோறும் நெஞ்சில் அருளும், அன்பும், அச்சமும் பெருகுகின்றன. 'அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை,' 'அறம் பொன்றுத்துணை' என்பவை குருமணியின் அனுபவத்தால் அனைவரும் அறியப்படுகின்றன. திருவருட் செல்வமே உயிர்க்கு ஊதியம். 'அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை,' 'அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை,' உயிர் அஞ்சும் வினை இல்லை' என்னும் உண்மையைக் கேதாரம் பசுபதிநாத் அமரநாத் யாத்திரை முதலியவற்றால் வெளிப்படுத்தி யருளும் நம் பெருமானைப் போற்றாதார் எவரும் இலர்.

" அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு "

என்னும் தமிழ் மறை, அருளரசுக்கும் பொருந்தும். அந் நான்கும் நம் குருமணியின்பால் என்றும் ஏவல் கேட்பவை.

ஏழைகட்கு உணவும், செல்வர்கட்குத் தெய்வத்தொண்டில் ஈடுபாடும் இளையோர்க்குக் கல்வியும், முதியோர்க்கு ஞானமும், உலகோர்க்குத் திருநெறி யொழுக்கமும் நல்கியருளும் நம் குருநாதர் இக் கும்பாபிஷேகம் ஒன்றுதானே நிகழ்த்துகின்றது? சீகாழி, திருக்கடவூர், திருப்பறியலூர், பேரளம், திருவிளநகர், மாயூரம் வள்ளலார்கோயில், காசி விசுவநாதர் திருக்கோயில், தருமைக் குருமுதல்வர் கோயில், திருமுல்லைவாயில், திருநின்றியூர் முதலிய தலங்களிலே கும்பாபிஷேகம் செய்வித்த தெய்வப் பயிற்சியும் ஆனந்தபரவசர்க்கும் 24-ஆவது குருமகாசந்நிதானத்திற்கும் திருக்கோயில் எடுப்பித்து வழிபடுகின்ற சிவ புண்ணியப் பெருக்கமும் ஒன்றுதிரண்ட திருவுருவமே நம் குருமணியின் திருமேனியாகும். ஆதலின் நம்மை ஆளும் இப்பெருமானுரைச் சமயம் வாய்த்தபோதெல்லாம் பாராட்டிப் போற்றுவது சைவ நன்மக்களின் கடமையாகும். அக் கடமையைச் செய்ய எங்களைப் பணிகொண்ட திருவருளையும் குருவருளையும் போற்றுகின்றோம். அடியார்கள் வாழ்வே வருக, தெய்வசிகாமணியே வருக வருக என வரவேற்று வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம் அன்பருட்குரிய அடியார்கள்

திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரர்கோயில் மகாகும்பாபிஷேக விழா. 29—4—1959.	B. சோமசுந்தரம் பிள்ளை. G. சுந்தரேசம் பிள்ளை. N. சுப்பிரமணிய பிள்ளை.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I am glad to have had dharsan again tonight. The Temple is kept very neatly as usual. I wish the other temples follow this temple in the neat way of maintaining the temple and giving facilities to devotees.

(Sd.) R. Subramaniam,
Professor of Medicine, Madras Medical College.
31—12—'58.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

குருமணியின் அருளுரை

[29—4—59 புதன்கிழமை காலையில் திருக்குறுக்கைத் திருக்கோயில் மகாகும்பாபிடேகம் மிக்க சிறப்போடு நிகழ்த்து வித்தருளிய தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களை, அன்று மாலையில், ஆதீனத்துச் சீடர்களாகிய கார்காத்த சைவர் முதலிய சான்றோர் பலர் தம் மெய்யன்புள்ளத்தோடு அங்குள்ள ஆற்றினிடத்திலிருந்து வரவேற்றுத் திருக்கோயிற் பேரெழிற் காவணத்துள் உயரிய முறையிற் பாராட்டு விழா நடத்தினர். அப் பேரவையில் வீற்றிருந்தருளி, அன்பு வழிபாட்டை ஏற்று வாழ்த்தி அருளுரையை வழங்கி, சைவத் திருவாளர்கள் G. சுந்தரேசம் பிள்ளை. B. சோமசுந்தரம் பிள்ளை, N. சுப்பிரமணியப் பிள்ளை மூவர்க்கும் பொன்னுடை போர்த்தருளினார்கள்.]

அன்பர்களே, இன்று கிடைத்தற்கரிய திருநாள். மகா கும்பாபிடேக விசேஷ தினம் என்றோ ஒரு முறை கிடைக்கக் கூடியது. இன்று காலையில் ஞானம்பிகா சமேத யோகீசுவரர் திருவருளைப் பெற்று இன்பநலம் உற்றோம். இங்கே இன்று எங்கள் கடமையைத்தான் செய்தோம். கடமை ஒவ்வொருவர்க்கும் உண்டு. அவரவர் தம் தம் கடமையைத் தவறாமல் செய்து வரவேண்டும். இப்பேரவையில் விளங்கும் கார்காத்த சைவப் பெருமக்கள் எல்லாரும் தங்கள் கடமையைத்தான் செய்திருக்கிறார்கள். பெருமக்கள் என்பது என்றும் மாறாமல் விளங்க, நன்னெறியில் ஒழுகும் ஒன்றே தலையானது. அதுவே நம் சைவப் பெருமக்களது கடமை. உலகில் அழியாதவற்றைக் காப்பதும் அழிவனவற்றைக் காக்க முயன்று துன்பம் அடையாமையும் அறிந்தோர்க்கு இயல்பு. அசையும் பொருளும் அசையாப் பொருளும் இவை இவை என்று பகுத்துணரும் உணர்வே ‘விவேகம்’ எனப்படும். சென்ற வாரத்தில் ஒருவர் வந்தார். அவர் செல்வத்தில் பெரியவர். பெருஞ்செல்வம் பெற்றவராயிருந்தும் சஞ்சலம் மிகுதியாகி வருந்துகின்றார். சஞ்சலத்துக்கு மருந்து தேடுகின்றார். அதற்கு மருந்து திருவருள் ஒன்றுதான். வேறு இல்லை. அம் மருந்தைப் பெறுவதற்குச் செல்வத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நல்வழியில் செலவிடும்

செல்வம் அம்மருந்தை அடையச்செய்யும். அந்தச் செல்வர்க்குத் தக்கமருந்து இது என்று எண்ணி, பாராயணம்பண்ண நியமித்து அனுப்பினோம். நிலம் அசையும். வைத்திருக்கும் முதலும் அசையும். காலம் அசைவதற்குத் துணையாயிருக்கும். எல்லாம் அசையும் பொருள்களே. திருவருள் ஒன்றே அசையாப்பொருள். அசையும் பொருள் இரும்புப்பெட்டிக்குள் இருந்தால் ஒருபயனும் தாராது. அதைத் திருவருளாக மாற்றிக்கொள்ள முந்த வேண்டும். 'வார வழிபாடு' பல இடங்களில் நடக்கின்றது. மக்கள் ஒருங்குகூடித் திரள் திரளாகத் திருக்கோயிலில் வழிபாடு செய்த நாடு நம்நாடு. அம்முறையை மீண்டும் கடைப்பிடித்தல் வேண்டும். அதுபோலத் திருவருளை வளர்க்கும்வழி வேறுஇல்லை.

'கூடிக் கூடித் தொண்டர் தங்கள் கொண்டபாணி குறை படாமே ஆடிப்பாடி அழுதுநெக்கு அங்கு அன்புடையவர்க்கு இன்பம்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளினார்கள் கூட்டுவழிபாடு பேரின்பம் தரும்.

"வம்மின் அடியீர் நாள்மலர்இட்டுத் தொழுதுய்ய
உம்அன்பினோடு எம்அன்புசெய்து ஈசன்திருக்கோயில்'

என்று திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தர், கூடி வழிபட்டு உய்ய அடியார்களை வரவழைப்பதை அறியலாம். 'வார வழிபாடு' வாரத்துக்கு ஒருநாள் வழிபடுவதைக் குறிக்கும். வாரம் என்றால் அன்பு. தேவாரம் - தெய்வபக்தி, அன்பு வழிபாடும் ஆகும். அன்பில்லா வழிபாடு இருப்பதால் அன்புவழிபாடு என்பது பொருத்தமே.

ஆகையால் பொருள்களை அருள்வழியிற் செலவிட்டு, ஆண்டவனை அசைக்கவேண்டும். குலுக்கவேண்டும். துன்பம் குலுங்கவேண்டின் ஆண்டவனைக் குலுக்கவேண்டும். ஹரஹர முழக்கம் எங்கும் எப்போதும் பெருகிவரின் உலகில் உயிர்கள் இன்பமே எய்திவாழும். உயிர்க்குப் பயனில்லாதவற்றில் காலம் போக்கும் பலர்க்கு அப் பழக்கம்தீர, இவ் வாரவழிபாடு நல்ல வழியாகும். வீண்பொழுது போக்குவது நல்லதன்று. கடவுள் கணக்கில் வீண்பொழுது போக்குவார் பேரேடும் உண்டு.

"தொழுது தூமலர் தூவித்துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

இன்னம்பர் ஈசன் கணக்கில் யார் யார் அகப்பட்டிருக்கின்றார்கள் என்பது இதில் தெரியும். இவ்விருதிறத்தவருள் இராமநாத ஐயர் தியாகராஜையர் முதலியோர் முதல்வகைக் கணக்கில் அடங்கு வார்கள். சிவார்ச்சனையும் தங்கக்கவசமும் வள்ளலார்க்குச்செய்ய வைத்த சிவபுண்ணியத்தால். உயிர்க்கு உயிராய் உள்ளே இருக் கிறவன் ஆண்டவன். அவன் உயிர்கள் செய்யும் ஒவ்வொன்றை யும் உணர்ந்து தன் கணக்கில் எழுதிவைத்துக்கொள்வான். இதில் என்ன சந்தேகம்?

இத் திருக்குறுக்கையில் இங்குள்ள சைவப் பெருமக்கள் வாரவழிபாடுசெய்து வரவேண்டும். வசதியான நாளில் வழிபட்டு வந்தால் வாழ்வு நல்வாழ்வு - இன்ப வாழ்வாகும். முப்போதும் எப்போதும் வழிபட்டுவந்த தெய்வத் தமிழ்நாட்டில் வாரத்துக்கு ஒரு நாளாவது வழிபடவேண்டாமா? சைவத் திருமுறைகளும் வேதாகமங்களும் நமக்கு வாய்த்திருக்கின்றன. சைவம் எல் லார்க்கும் பொது. எல்லார்க்கும் சைவத்தில் இடம் உண்டு. இதுவே, இப்போது இந்த வரவேற்புக்கு இசையவைத்தது. இத் திருக்கோயிலில் வந்து பாடிய அப்பர் சுவாமிகள், காமத்தை ஒழிக்கும் வீரத்தைக் காட்டிலும் வேறு பெரிய வீரம் இல்லை. அதனால், இத்தலம் அதை ஒழித்த வீரத்தைக் குறிக்கும் தானம் ஆயிற்று. ஆகவே வீரட்டானங்களுள் இதுவேமேலானது என்ற கருத்துடையவராய் இத்தலப்பதிகத்துள்காமத்தைஒழித்தவர்கள் சரிதங்களைப்பாடியருளினர். பிரமதேவனு ஆதியில் வேதமோதித் திருவடி மலரில் அருச்சித்து வழிபட்டு, வேதியர் உணரும் வண்ணம் உணரலுற்றவர்; நீற்றினை நிறையப்பூசி நித்தலும் சிவநியமம் செய்து ஆற்றுநீர் நிறைத்து ஆட்டி வழிபடும் அந்தண ராகிய மார்க்கண்டேயரை மாய்க்க, முன்மொழிந்த ஆயுட்காலம் முடிந்ததென்று தருமராசனுக்காக வந்த கூற்றைக் குமைத்தவர். தழைத்த ஆத்தியின்கீழ், தாபரலிங்கமாக மணலைக் குவித்து வைத்து, அதில் சிவபாவனை செய்து ஆவாகனம் முதலியன புரிந்து, தாம் மேய்த்த பசுக்களின் பாலைக் கறந்துகொண்டு, அபிஷேகம் செய்ய, அதைக் கண்டு, சிவாபராதம் செய்த வேதிய னாகிய தம் தந்தையினுடைய தாளைப் பெரிய கொடிய மழுவால் வீசிய சண்டேசுவர நாயனருக்குக் குழைத்த அமுதம் கொடுத் தவர். திருவானைக்காவில் சிவலிங்கத் திருமேனிக்குத் திருநிழற் பந்தர் செய்து இன்புறுத்தி இறந்த சிலந்தியைக் காவிரிநாடாளும் கோச்செங்கட்சோழனாகப் பிறந்தவர்.

எண்ணி ஆயிரம் பூக்களைக் கொண்டு அருச்சனை புரியுங்கால் ஒரு பூக்குறைய, தன் மெய்க்கண்ணைப் பறித்து அணிந்த திருமாலுக்கு ஒரு சக்கரம் அருளியவர். சிவலிங்கத்தை நாள் தோறும் கண்டு உண்ணும் நியமம் தவறாதவராய்த் தம் செயல் அறியாது கல் எறிந்து, கடவுள் களிப்பறிந்து அதுவே தொண்டாக என்றும் செய்து, அதனை அல்லார் கல்லாகக் கொள்ள அரனார் மலராகக் களிக்கக்கண்டு, அகமிக மகிழ்ந்த சாக்கிய நாயனாரை நீள்விசும்பு ஆளவைத்தவர், இரவில் எரியேந்தி நட்டம் ஆடிக் கொல்லிப்பண் உகந்த நல்லிசையுருவினர். ஒரு கையில் ஒரு வில்லும் அம்பும் பிறிதொருகையில் கல்லையில் இறைச்சிப்போனகமும் ஏந்தி இறைவர் முடிமிசை மலரைக் காற்செருப்பால் மாற்றித் தூய திருமஞ்சனவாயின் நீரை. (விளைத்த அன்பை உமிழ்வார்போல) அம்முடிமேல் விட்டு ஆட்டித் தம்தலைமிசைச் சுமந்த திருப்பள்ளித்தாமத்தைச் சார்த்தி, அத்திருவமுதை ஊட்டி, இறைவர் விழிகளில் ஒழுகும் குருதியைக் கண்டு தம் கண்களைப் பறித்து அப்பிய கண்ணப்பருக்கு வலப்பால்வாழ்வை அளித்தவர். திருமறைக்காட்டுத்திருக்கோயிலில் மூக்குச்சுட்டிடத்தூண்டி அபுத்திபூர்வ புண்ணியம் பண்ணிய கருப்பெலிக்கு மண்ணும் விண்ணும் நீண்டவானுலகம் எல்லாம் கொடுத்தவர். மாதியலும் பாதியர் கணம்புல்ல நாயனார்க்கு அருள்கள் செய்தவர். திருக்கயிலையை எடுத்து உமையை நடுங்கச்செய்த இராவணனைத் திருக்காற் பெருவிரலை மட்டும் ஊன்றி அலறி வீழ்வித்து, அவன் வேதகீதயாழிசைக்கு இரங்கி நாளும் வாளும் தேரும் பேரும்நல்கியருளிய கொற்றவர். மாலும் அயனும் அடிமுடி காணாதவர். அர்ச்சுனனுக்கு வேட வடிவம் பூண்டு அரியமந்திரங்களையும் சொல்லிப் பெரிய படையையும் கொடுத்தவர். திருக்குறுக்கை வீரட்டனார் பெரு விழாவில் ஏழுநாளும் கூத்தராய்த் திருவீதியுலாவருவார். ஏழாம்நாள் முடிவில் தீர்த்தம் கொடுப்பார்.

இந்த யோகீசுவரர் நியாயம் புரிபவர். மன்மதனுயினும் முறைக்கேடு செய்ததால் தண்டித்தவர். பெருஞ்செல்வர். பொய்ப்பொருளே பிரதானமாகக்கொண்டு, மெய்ப்பொருளைப் புறக்கணிப்பது நியாயமாகாது. திருமூலர் திருமந்திரத்தில்,

" அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்

இடப்பக்கமே இறை நோந்தது என்ருர்
கிடக்கைப் படுத்தார் கிடந்தோழிந்தாரே ''

பக்கத்திலே வலிக்கிறது என்ருர் பறந்தது கூட்டைவிட்டுப் பறவை. கிடைத்தற்கு அரிய இவ்வுடல் உள்ளபோதே, உடம்பால் ஆகும் பயனைப் பேற்றுக்கோள்ள வேண்டும். நிலையாமை நினைவில் இருந்தால் நிலையைப் பேறலாம்.

'' ஆக்கையாற் பயன் என் ? அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றிஎன் ளுதஇவ்
வாக்கையால் பயன் என் ?''

'' பூக் கைக்கோண்டு அரன் போன்னடி போற்றிலார்
நாக்கைக் கோண்டு அரன் நாமம் நவீல்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரை ஆகிக் கழிவரே ''

என்று அப்பர் சுவாமிகள் அருளியதையும் அறிவோம். இதற்கு வழிபாடு ஒன்றே சாதனம். வார வழிபாடு தோடங்குங்கள். என். எஸ். பிள்ளை, ஜி. எஸ். பிள்ளை சேர்த்துக்கோள்வார்கள். சைவர்கள் சந்தியாவந்தனத்தைச் செய்துவரவேண்டும். அதைக் கடைப்பிடித்தால் நல்லாறு தேரிந்துணரலாம். சிரார்த்தம் மிக முக்கியம். சிரார்த்தத்தை மறந்தவர் நன்றி மறந்தவர். கிருகஸ் தர்க்குச் சிரார்த்தமும் சந்நியாசிகட்குக் குருபூஜையும் நன்றி யறிதலைக் கடைப்பிடித்துச் செய்துவரும் இன்றியமையாச் சேயல்கள். புரோகிதர் கிடைக்காவிட்டாலும் அவர்க்குத் தர விரும்பாவிட்டாலும் தேசிகர்களை வைத்துச் சிரார்த்தம் கோடுக் கலாம். இது ஒரு போன்னுள். யோகீசுரரது அநுக்கிரகம் கிடைக்கும் நாள். ஞானம்பிகை ஞானம் அருளும் நாள். இந் நாளில் திடமான சங்கல்பம் செய்துகோள்ளுங்கள். சமயப் பற்றும் சமயாசாரமும் இல்லாமல் நற்கதி அடைய வழியில்லை. மதம் தோணி. பக்தி சரக்கு. அருள் இலாபம்.

அகத்தியர் காலத்திலும் வடநாடு சலனம் அடைந்தது. எந்நாட்டிற்கும் இறைவன் ஆய்த் தேன்னுடுடைய சிவன் எல்லார் உள்ளத்திலும் இருக்கின்ருன். அவன் திருவடியில் அன்பால் உறைப்புடையவர்களாகவேண்டும். அதுவே உய்யும் வழி யாகும். மக்கள் அறிவுக்கு அப்பாற்பட்டது [சமயஞானம்.

அதன் பெருமையை மதிக்காமல், பிறவியை வீணுக்கிக் கோள்வது அறிவாகாது. ஆயிரம் பதினுயிரம் லக்ஷம் சேல்வம் தேடிக் குவித்தாலும் அருளைத் தேடிப்பேறுதல் அரிது. சமய நூல்கள் ஞான சாஸ்திரங்கள். அவற்றைக் காக்கவேண்டும். முந்நூறு வேலி அறநேறியில் வைத்ததைக் கல்லூரி வைத்து அறங்காவல் சேய்யும் அன்பநாதபுரம் கார்காத்த வேளாளர் வழியினர் பேரிய புண்ணியச் சேல்வத்தைத் தேடிக்கோண்ட வர்கள். அவ்வாறே இறைவன் அருள்நேறிக்கு வைத்த அருள் நேறிப்போருள் அத்திருவருள் வழிக்கே பயன்படவேண்டும். கடவுளை நம்பி வாழ்கின்ற நாடு நம் நாடு. நீங்கள் இன்றுமுதல் வார வழிபாடு சேய்துவரத் திடமான சங்கல்பம் சேய்துகோள்ள வேண்டும். B. T. பிள்ளை 100, E. N. S. பிள்ளை 500 இப்படி ஒவ்வோரு சேல்வரும் உதவினுல், வழிபாடு மிக்க சிறந்த முறையில் நடைபேற்றுவரும். கடவுள் ஒருவர் இருக்கிருர். அவர் திருவருளைப்பேறச் சமயப்பற்று வேண்டும். சமயாசாரம் வேண்டும். யோகீசுரர் அநுக்ரஹமும் ஞானும்பிகையின் அருளும் உங்களுக்கு உண்டாகுக. நீங்கள் எல்லாரும் எல்லா நலங்களும் பேற்று இனிது வாழ்க.

(372 ஆம் பக்கத்தின் தோடர்ச்சி)

திருக்கடவூரும், தக்கன் வேள்வி சிதைத்த திருப்பறியலூரும், மன்மதனை எரித்த குறுக்கையும் அத்தலங்கள்.

கும்பாபிஷேகம் : இத்துணைச் சிறப்புக்கள் பலவாய்ந்த வீரட்டத்தலமாகிய குறுக்கை திருக்கோவில் பழுதுபார்க்கப் பட்டுத் திருப்பணிகள் சேய்யப்பேற்று 29—4—1959 அன்று கும்பாபிஷேகம் சேய்யப்பேற்றது. அருளாட்சியேற்ற காலந் தோடங்கி ஆதீனத்துக்குச் சோந்தமான தேவஸ்தானங்கள் பலவற்றைத் திருப்பணியால் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் சேய்வித்துவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் இத்திருக் கோயிலையும் கும்பாபிஷேகம் சேய்வித்தருளியுள்ளார்கள். காமனைவேன்ற தலமாகிய இத்தலத்திற்போந்து வழிபட்டு அன்பர்கள் இருமைப்பயன்களையும் எய்தி இன்புற்றனர்.

திருக்குறுக்கை

சொ. சி.

குறுக்கை : யோகம்; நீண்டயோகம்; தக்கனது வேள்வியைச் சிதைத்தபின் இறைவன் கடுக்காய்மர நிழலில் அமர்ந்து யோகம்புரியலானார். இறைவி இமவானுக்குப் பெண்ணாய்ப் பிறந்து இறைவனை அடைவேன் என்று கூறி மறைந்தார். உலகம் வாடியது. இறைவனும் இறைவியும் தனித்தனியே யோகநிலை தலைப்பட்டுவிட்டால் உலக இயக்கம் ஏது? தேவர்கள் இந்திரனிடம் ஓடி முறையிட்டனர். மன்மதனைக் கொண்டு இறைவன் மனத்தை மாற்றவேண்டும். அதுவே உபாயம் என்று வியாழபகவான் கூறினார். மன்மதன் புறப்பட்டான். யோகமிருந்த இறைவன்மேல் மலர்க்கணைகளைத்தொடுத்தான். நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட தீ மன்மதனைச் சாம்பலாக்கியது. உருவநிலையில் வந்த மன்மதன் சாம்பலுருவானான். இந்த நிகழ்ச்சி இத்தலத்தில் நடைபெற்றது.

இடம் : தஞ்சை மாவட்டம் மாயூரம் தாலுகா நீடூர் புகைவண்டி நிலையத்திலிருந்து ஐந்துகல் தொலைவில் உள்ளது. இது தருமையாதீனத்தின் இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்று. இப்போது இதனைத் தருமையாதீனத்து இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாய் வீற்றிருந்தருளும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் நிர்வகித்து வருகின்றார்கள்.

புராணப் பெயர்கள் : கடுவனம், (கடுக்காய் மரம் தலவிருட்சம்) யோகீசபுரம், (அம்மையாரைப் பிரிந்து இறைவன் தவயோகம் புரிந்த இடம்) காமதகனபுரம் (மன்மதனை எரித்த இடம்) கம்பகரபுரம் (இலக்குமியின் நடுக்கந்தவிர்த்த இடம்) என்பனவும் இதன் பெயர்கள்.

குறுக்கை என்ற பெயர் : தீர்க்கவாகு முனிவர் இத்தலத்துக்கு வந்தார். இறைவனை அபிடேகம் செய்து பூசிக்கக் கங்கைநீரை விரும்பினார். தமது கரங்களை நீட்டினார். கரங்கள் நீளாது குறுகின. இதற்குக் குறுக்கை என்ற பெயர் வந்தது என்பர்.

திருவுருவங்கள் : வீரட்டேசுவரர் இறைவன் திருப் பெயர். ஞானம்பிகை இறைவி திருப்பெயர். யோகீசுவரர் எழுந் தருளுந் திருமேனி. அன்னபூரணி, மன்மதன், இரதி திருவுருவங் களும் உள்ளன. கணபதி முதலிய பரிவார தேவதைகள், குறுங்கை முனிவர், விநாயகர் திருவுருவங்களும் உள்ளன.

வரலாறுகள் : மன்மதனை எரித்த வீர நிகழ்ச்சி இங்கே நிகழ்ந்தது. திருமணத்தின்போது இறைவன், கணவனை இழந்து வருந்திய இரதியின் வேண்டுகோட்படி மனைவிக்கு உருவமுடைய வனாகவும் மன்மதனைப் படைத்தார். தீர்க்கவாகு முனிவர் என்ற மெய்யடியார் இமயமலையிலே தவம்புரிந்தவர். பல தலங்களையும் வணங்கிக்கொண்டே குறுக்கைக்கு வந்தார். தம்முடைய வழக்கப்படி நீராடியபின் ஆகாய கங்கையைப் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்விக்கக் கைகளை நீட்டினார். கைகள் நீள வில்லை. விநாயகரிடம் சென்று வேண்டினார். யாமும் அவ்வாறு குறுக்கையுடையோமாய் உள்ளோம் என்று விநாயகர் திருவாய் மலர முனிவர் உறுதி பின்னும் அதிகமாகிவிட்டது. இதுதான் முடிவென்றால் உயிரை விடுதலே சரி என்ற முடிவுக்கு வந்த முனிவர் கல்லில் தலையை மோதப்போனார். ஒருகை அதிலி ருந்தும் வெளிவந்து தடுத்தது. இறைவன் திருக்காட்சி வழங் கினார். முனிவர் விழுந்து பரவியபின் தம் கை குறுகிய காரணத்தை வினவினார். தலப் பெருமை உரைத்த இறைவன் இஃதறியாது கங்கையை விரும்பியமையின் உன் கைகளைக் குறுக்கினோம் என்று அருளினார். தீர்க்கவாகு முனிவர் ஆகி இத் தலத்தில் இன்றும் எழுந்தருளி இருக்கிறார்.

சோழநாட்டரசன் ஜெயத்துவசன் என்பான் காளியை வழிபடுபவன். இவன்காலத்திற் சோழநாடு காடாகக் கிடந்தது. நெற்பயிர் விளைச்சலில்லை. பெருமானுக்கு நிவேதனம் செய்ய வேண்டுமே நெல் இல்லையே என்செய்வது என்று எண்ணினான். காசியில் எழுந்தருளியிருக்கும் அன்னபூரணியம்மையின் ஆணைப்படியே, காளிதேவி மணி ஒலிக்க அழல்வடிவாய் முன் வரத் தான் பின்னாக வந்துகொண்டிருந்தான். இத் தலத்திற்கு வந்ததும் மணி ஒலி அடங்கிற்று அழல் வடிவும் அகன்றது. அரசன் இறைவனை வழிபட்டான். ஜெயத்துவசன் கருத்தறிந்த அம்மையார் வெண்சோறு ஓரிரவு எங்கும் சிந்தினள், சோறு

பரவிய இடமெல்லாம் நஞ்சை நிலமாயிற்று. அரசன் கவலை நீங்கி இன்புற்ருன்.

இறைவன் திருமணக்காலத்தில் வடபுறம் தாழ்ந்து தென் பால் உயர்ந்ததுகண்டு உலகைச் சமமாக்கக்கருதி அகத்திய முனிவரைத் தென்திசைக்கு அனுப்பினுர். திருமணக்காட்சி காணமுடியவில்லையே என்ற வருத்தத்துடன் அகத்தியர் இறைவன் அருளாணைப்படி இங்கு வந்து வழிபட்டுச் சிலநாட்கள் தங்கியுமிருந்தனர். இத்தலத்தின் அருகிலுள்ள திருமணஞ் சேரியில் திருமணக்காட்சி கண்டு அருள்பெற்ருர் என்பது வரலாறு.

தலநூல்கள்: திருநாவுக்கரசு சுவாமிகள் திருநேரிசை இத்தலத்திற்கு உண்டு. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய புராணம் இத்தலத்திற்கு உள்ளது.

சுற்றுப்புறவூர்கள்: தேவனூர், கங்கணம்புத்தூர் வில் (வளை)லியநல்லூர், கால்வளைமேடு, பஞ்சபாணநல்லூர், சோத்த மங்கலம், கூத்தன்வாழ்க்கை என்ற ஊர்கள் காமதகன வரலாற்றை நினைப்பூட்டி நிற்கின்றன.

வீரட்டங்கள்: வெல்லுதற்கரிய பகையாக உலகில் விளங்குவதுகாமம். அரிதாகிய அதனை வெல்லுதல் செய்தற் கரிய செயல். காமனை வென்ற பெருவீரத்தைக் கடவுள் விளைத் தான். அதுமட்டுமோ? ஆட்சி என்ருல் அதற்கு ஒரு ஒழுங்கு உண்டு. ஒழுங்கு மீறுபவர் எவராஞலும் தண்டனை உண்டு. அவர்க்கு உடந்தையாக நிற்பவர்க்கும் தக்க ஒறுப்புமுண்டு. தனக்குப் பெண்தந்த மாமன் தக்கன் ஆட்சி வரம்பை மீறிய காரணத்தால் அவனையும் ஒறுக்கவேண்டிய நிலை ஆன்ம அரசனுன இறைவனுக்கு வந்தது. தக்கன் தலையிழக்கவும், உடனின்ற தேவர்கள் ஒருங்கு துயருறவும் நேர்ந்தது. அப்படி ஆட்சிக்கு மீறியவர்களை முற்றும் ஒழித்துவிட வேண்டும் என்ற குறிப்பும் அங்கு இல்லை. திருந்தவேண்டும் என்பதே இத்தகைய வீரச்செயல்கள். இறைவன் இத்தகைய செயல்கள் நிகழ்த்திக் காட்டிய திருத்தலங்களை வீரட்டங்கள் என்கிருேம். அவை எட்டு. அவற்றுள் மூன்று வீரட்டத்தலங்கள் இவ் ஆதீனத் துக்குச் சொந்தமான தேவஸ்தானங்கள் யமனை உதைத்த

(தொடர்ச்சி பக்கம் 369 இல் பார்க்க)



தருமையாதீன மடாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை
சென்னை மாநில ஸ்தலஸ்தாபன அமைச்சர் கனம். திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்கள் தரிசித்தல்

வேலூர் அநாதைக் குழந்தைகள் விடுதி ஆண்டு விழா. மாணவர்கள் அம்பர் ராட்டையால் நூல் நூற்றல்.

வேலூர் அநாதைக் குழந்தைகள் விடுதி ஆண்டு விழா

ஆதீனக் கல்வி நிலையங்களின் மாணவர் கழகங்கள் ஆண்டுவிழாவில்



சென்னை மாநில ஸ்தலஸ்தாபன அமைச்சர் கனம். திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்கள் தலைமையுரையாற்றுதல்

கந்தபுராண வரலாறு

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,
தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

—கச்சியப்பர்

புராணம் :-

புராணம் என்பது புராதனம் என்பதன் திரிபு. அதாவது பழமை எனப் பொருள்படும். எனவே பழமையான பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் வரலாற்றைத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் சுவை பெறக் கூறுவனவே புராணங்களாம். அவை பதினெண் புராணங்களாகப் பரவியுள்ளன. அவற்றுள் சிவபுராணம் பத்து. அப்பத்தனுள் ஒன்றான ஸ்காந்தம் வடமொழியில் இலட்சம் கிரந்தங்களைக்கொண்டு விளங்குவது. அதில் ஒரு பகுதி சங்கர சங்கிதை எனப்பெறும். அதன்கண் முற்பட்டு விளங்கும் சிவரகசிய கண்டத்தில் கூறப்பெறும் அறுமுகப்பெருமானின் வரலாற்றை 10345 செந்தமிழ் விருத்தப் பாடல்களால் கந்தபுராணம் என இயற்றியருளியவர் காஞ்சிபுரம் குமரகோட்டத்து அர்ச்சகரான ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாராவர். அதில் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என்ற முறையில் ஆறு காண்டங்கள் உள்ளன. அவற்றை வரலாற்றுத் தொடர்பு விளங்குவதற்காக, கீழ்க்காணும் முறைப்படி அமைக்கப்பெற்றிருக்கிறது.

தருமபுர ஆதீனப் புலவர், காஞ்சிபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. அவர்களைக்கொண்டு இரண்டாண்டுகட்கு மேலாக இங்நிலையத்தில் நடத்தப்பெற்றுவந்த கந்தபுராண விரிவுரை நிறைவு விழாவின்போது பொதுமக்கட்குப் பயன்படுமாறு வெளியிடப்பெற்றது.

தக்ஷகாண்டம் :-

பிரமதேவனின் மானசீகப்புத்திரன் தக்ஷன். இவன் உலகம் முழுவதையும் ஆள வரம் பெறுதற்பொருட்டுச் சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்தான். தவத்திற்கு இரங்கிய பெருமான் காட்சி கொடுத்து, யாது வரம் வேண்டுமென வினவினார். அதற்குத் தக்ஷன் தேவர்கள் தனக்கு அடிமையாகவேண்டும் என்றும், எல்லா உலகங்களையும் தானே ஆளவேண்டுமென்றும், உமாதேவியார் தனக்கு மகளாக வரவேண்டுமென்றும், அம் மகளைச் சிவபெருமானே திருமணம் செய்தருளவேண்டுமென் றும் வேண்டினான். பக்தற்கிரங்கும் பரம்பொருள் தக்ஷனுக்கு அவ்வாறே வரம் கொடுத்தருளினார். அவ் வரத்தின்படியே தக்ஷன் தேவர்களை ஏவல்கொண்டான். உமாதேவியாரைக் காளிந்தி நதிக்கரையில் இருந்த ஒரு தாமரை மலரில் மகவாகப் பெற்று வளர்த்துப் பெருமானுக்கு மணம் செய்துகொடுத்தான். திருமணக் காலத்தில் மாமனாராகிய தன்னைப் பரமன் வணங்க வில்லை என்று அவர்மீது பகைமைகொண்டான். தக்ஷனது பெண்களாகிய இருபத்தேழு நக்ஷத்திரங்களுள் உரோகிணி யிடம்மட்டும் அதிக விருப்புள்ளவனாய் இருந்த தன்மருமகனாகிய சந்திரனை க்ஷயரோகத்தால் இறக்குமாறு சபித்தான். சாபமேற்ற சந்திரன் தன் கலைகள் பலவும் குறைந்த பிறகு ஒரு கலையோடு சிவபெருமானிடத்துச் சரணடைந்தான். எல்லாத் தேவர்களா லும் கைவிடப்பட்ட சந்திரனைத் தன் சடாமகுடத்தில் வைத்துக் கலைகள் வளரவும், குறையவும் செய்து காப்பாற்றினார். இவ்விரு காரணத்தையும் முன்னிட்டு தக்ஷன் பரமன் மீது பகைமை கொண்டான். பரமனை அவமதிக்க எண்ணிய தக்ஷன் சிவபெருமானை நீக்கி ஒரு பெரிய வேள்வி செய்யுமாறு தேவர்களுக்குக் கட்டளையிட்டான். தேவதேவனாகிய சிவ பெருமானை நீக்கி வேள்வி செய்யத் தேவர்கள் அஞ்சி ஒருப்படவில்லை. அதுகண்ட தக்ஷன் தானே அவ்வேள் விக்குத் தலைமை பூண்டு அதனை நடத்தினான். நந்திதேவரும், ததீசி முனிவரும் யாகசாலைக்கு எழுந்தருளி, பரமனை நீக்கிச் செய்யும் இச் செயல் அடாதது என்று அறம் உரைத்தனர். கெடுமதியுள்ள தக்ஷன் கேட்டிலன். அதனுடன் நில்லாது பரம் பொருளை இகழவும் செய்தான். அவ்விகழ்ச்சியுரை சொன்ன தக்ஷன் தலையறுபடவும், அதைக்கேட்டுக்கொண்டு சும்மாயிருந்த தேவர்கள், சூரபதுமன் முதலிய அசுரர்களால் நெடுங்காலம்

துன்புறவும் சபித்தனர். தன்னைச் சபித்த அவர்களை மதியாமல் வேள்வியைத் தொடங்கினான் தக்ஷன். உமாதேவியாகிய தாக்ஷாயணி, யாகத்தைக் காண விரும்பிவந்தார். அவரையும் தக்ஷன் இகழ்ந்தான். அவ்விகழ்ச்சிகேட்ட அம்மையார் பரம னிடத்தில் நிகழ்ந்ததைக் கூறினார். இறைவனுக்குக் கோபம் உண்டாகியது. அக்கோபத்திலிருந்து வீரபத்திரக்கடவுள் தோன் றினார். அம்மையின் கோபத்தினின்றும் காளி தோன்றினாள். இவ்விருவரும் பூதகணங்களுடன் தக்ஷனின் யாகசாலைக்குச் சென்று சிவபரம்பொருளுக்கு உரிய முதல் அவிர்ப்பாகத்தைக் கேட்டனர். கொடுக்க மறுத்ததால் தேவர்களைத் தண்டித்தனர். தக்ஷன் தலையை அறுத்து யாககுண்டத்தில் இட்டனர். அது கண்ட அவன் மனைவியாகிய வேதவல்லி வீரபத்திரக்கடவுளை வணங்கித் தன் கணவனை எழுப்பித்தரவேண்டினாள். வீரபத்திரர் அவள் வேண்டுகோளுக்கு இணங்கித் தக்ஷன் உடம்பில் அங் கிருந்த ஆட்டின் தலையைப் பொருத்தி எழுப்பித்தந்தார். தக்ஷன் தன் தவற்றை உணர்ந்து பரம்பொருளைப் போற்றி வழி பட்டு உயர்ந்தான்.

அசுரகாண்டம் :-

ததீசி முனிவர் இட்ட சாபத்தைத் தேவர்கள் அனுபவிக்க வேண்டிய காலம் வந்தது. பிரமதேவனது மற்றொரு மகனாகிய காசிப முனிவன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். அவ்வமயம் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியார் தன் குலம் ஓங்கும் பொருட்டு அசுர அரசன் மகளாகிய சுரசையென்பவளை மாயை எனப் பெயரிட்டுப் பல மாயாஜாலங்களை அவளுக்கு உபதேசித்து, காசிபனிடத்து அனுப்பினார். அவளும் தன்மாயா சக்தியால் காசிபனை மயக்கி அவனுடன் சேர்ந்து சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று பிள்ளைகளையும், அசமுகி என்ற பெண்ணையும், மேலும் அனேக அசுரர்களையும் பெற்றாள். பிள்ளைகள் தாயின் சொற்படி சிவபெருமானைக் குறித்துப் பத்தா யிரம் ஆண்டு தவம் இயற்றினர். பரமன் வெளிப்படவில்லை. மேலும் ஓராயிரம் ஆண்டு விண்ணில் இருந்து தன் தசைகளை அறுத்து யாககுண்டத்தில் இட்டு யாகம் செய்தான் சூரபதுமன். அப்படியும் பரமன் வெளிப்படாததால் யாககுண்டத்தில் வீழ்ந்து இறந்தான். சிங்கமுகனும், தாரகனும் அந்த யாகத்தைத் தொடர்ந்து நடத்தினர். சிவபெருமான் வெளிப்பட்டு யாதுவரம்

வேண்டும் என வினவினுர். இருவரும் தமது தமையனுகிய சூரபதுமன் எழவேண்டுமென்று முதலில் வரம் வேண்டினர். அவனும் உயிர்பேற்றெழுந்தான். எழுந்த சூரபதுமன் சிவபெருமானைப் பல வரங்கள் வேண்டினுன். பரமன், 108 யுகம் 1008 அண்டங்களையும் ஆள வரங்கொடுத்து, இந்திரஞாலத் தேரையும், பல ஆயுதங்களையும், ஒரு சிங்கத்தையும் அருள்புரிந்தார். அவ்வசுரர்களுக்குப் பரமனது சக்தியாலன்றி அழிவில்லை என்றும் வரம் அளித்தார். வரம் பெற்ற சூரபதுமன், தனக்குத் தேன் கடலில் வீரமகேந்திரத்தையும், சிங்கமுகனுக்கு வடகடலில் ஆசுரம் என்ற நகரத்தையும், தாரகனுக்கு விந்தியமலைக்கு அண்மையில் மாயாபுரம் என்னும் நகரத்தையும் தேவதச்சனைக் கோண்டு அமைக்கச்சேய்தான். மூவரும் அந்நகரங்களில் தங்கியிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர். தேவர்களுக்கு இன்னல்கள் பல விளைத்தனர். தேவர்கள் அனைவரும் பல திசைகளில் பிரிந்து நேடுங்காலம் வருந்தினர். அவர்கட்குத் துன்பம் நீங்கும் காலம் வந்தது.

உற்பத்திகாண்டம் :-

உமாதேவியார் தக்ஷன் மகளாகத் தாக்ஷாயணி என்ற பெயருடன் இருந்தமையால் சிவ அபராதம் செய்த தக்ஷன் நினைவு வராதிருக்கத் தமது பெயரை மாற்றிக்கோள்ள விரும்பி இறைவனிடம் வேண்டினுர். இறைவன் அம்மையாரை இமவான்மகளாக வளருமாறு அனுப்பிவிட்டுத் தான் தேன்முகப்பரமனுகி, யோகமூர்த்தமாய் சனகாதியர்கட்கு உபதேசித்துக்கோண்டிருந்தார். அதுகாலை, தேவர்கள் தங்கள் துன்பம் பொறுக்க முடியாமல் ஆண்டவனிடத்துத் தங்கள் குறையை மன்மதன் மூலமாகத் தேரிவித்தார்கள். உட்சென்ற மன்மதன் இறைவனது நேற்றிக்கண் பார்வையால் எரிக்கப்பட்டான். அவனது மனைவியாகிய இரதி வருந்தினுள். பார்வதிதேவியாரின் திருமணத்தின் பின்னர் மன்மதனை எழுப்பித் தருவதாக இரதியைத் தேற்றினுர். பிறகு தேவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இறைவனிடம் குறையை முறையிட்டனர். இறைவனும் பார்வதிதேவியாரை மணந்து கோண்டு சூரபதுமாதியர்களை ஒடுக்குதற்கு நல்ல குமாரனைத் தருவதாக வாக்களித்து அனுப்பினுர். பிறகு சப்த ரிஷிகள் வாயிலாகப் பார்வதிதேவியாரை மணம் புரிந்து போகமூர்த்தமாய் எழுந்தருளி இருந்தார். பல காலம் சேன்றும் பரமன்

குமாரனை அருளாததால் தேவர்கள் மீண்டும் இறைவனிடத்து முறையிட்டனர். அப்போழுது இறைவன் தனக்கு உரிய வேளிப் படையான ஐந்து திருமுகங்களோடு ஞானிகட்கு மட்டும் விளக்க மாகும் அதோ முகத்துடன் (கீழ் நோக்கிய முகம்) ஆறுமுகம் உடையவராய் விளங்கினுர். ஒவ்வோரு திருமுகத்திலும் உள்ள அக்கினிக் கண்ணினின்றும் ஆறு தீப்போறிகளைத் தோற்றுவித் தார். அவற்றைக்கண்டு அஞ்சியோடிய அம்மையின் திருவடிச் சிலம்புகளில் இருந்த நவமணிகள் சிந்தின. அவை அம்மையின் அருள்நோக்கால் ஒன்பது பேண்களாயின. அப் பேண்கள் ஆண்டவன் அருள் நோக்கால் கருவுற்று வீரவாகு முதலாய ஒன்பது வீரர்களைப் பேற்றேடுத்தனர். ஆறு தீப்போறிகளும், பரமன் ஆணையால் வாயு, அக்கினி, கங்கை முதலியவர்களால் தாங்கப்பேற்றுச் சரவணப்போய்கையைச் சார்ந்தன. அவை, ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் உடைய குழந் தையாய்த் தாமரை மலரில் வீற்றிருந்தருளின. கார்த்திகைப் பேண்கள் வேண்டுகோளுக்கிணங்க ஆறு குழந்தைகளாக வடி வேடுத்து வளர்ந்து அவர்களை மகிழ்வித்தன. சிலகாலஞ்சேன்ற பின்னர், பார்வதி பரமேசுவரர் இடபாருடராக எழுந்தருளினர். அவர்களைக்கண்டு ஆறு குழந்தைகளும் ஓடிவந்தன. அம்மையார் அவ்வாறு உருவங்களையும் ஒன்றுக அணைத்தேடுக்கக் கந்தன் என்ற பேயருடன் பழைய அறுமுக வடிவுகோண்டன. இவ்வாறு திருவுருக்கோண்ட கந்தப்பேருமானுடன் கயிலை சார்ந்த இறைவன் கந்தகிரியில் முருகப்பேருமானை நவவீரர்களுடன் அமரச்சேய்தார். அவ்வாறு அமர்ந்திருக்குங்காலை, முருகப் பேருமான் பிரணவத்தின் போருள் தேரியாது விழித்த பிரமதேவ னைக் குட்டிச் சிறையிருத்தியது முதலாகப் பல திருவிளையாடல் களைச் சேய்தார்.

துயரம் போறுக்கமாட்டாத தேவர்கள் மீண்டும் ஆண்டவனை வேண்ட இறைவனும் முருகப்பேருமானை அழைத்து நவவீரர் களுடன் சேன்று, அசுரர்களை ஒடுக்கித் தேவர்கட்கு நல்வாழ்வு அருளுமாறு பணித்தார். அவ்வாறே முருகப்பேருமானும் சேனை கள் புடைசூழத் தேன்திசைநோக்கி வரும் வழியில் விந்தியமலைப் பக்கத்தில் மாயாபுரியில் வாழ்ந்துவந்த தாரகாசுரனேடு போர் சேய்து அவனைக் கோன்று, குன்றம் போடிபடுத்தி தேவர்கட்குச் சிறிதே ஆறுதல் அளித்துத் திருச்சேந்தூர் சேன்று தங்கினுர்.

மகேந்திரகாண்டம் :-

அங்கிருந்து கொண்டு, சூரபதுமன் நிலையை அறிந்து வருமாறு வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பினார். தேவர்களைச் சிறையினின்றும்விட மறுத்தான் சூரபதுமன். அச் செய்தியை அறிந்த முருகப்பெருமான் அவனுடன் போர்செய்யப் புறப்பட்டார்.

யுத்தகாண்டம் :-

ஆறு நாட்கள் வரையில் சூரபதுமனின் மகனுன பானு கோபன், தம்பியாகிய சிங்கமுகன் முதலிய அசுரர்களுடன் போர் புரிந்து அனைவரையும் தொலைத்தார். ஏழாம் நாள்முதல் பத்தாம் நாள் வரை நான்கு நாள் சூரபதுமனுடன் போர் புரிந்தார். சூரபதுமன் பல வடிவங்கள் கொண்டு எதிர்த்தான். அவ் வடிவங்களை யெல்லாம் முருகப்பெருமான் தொலைத்தார். கடைசியாக மாமரவடிவங்கொண்டு நின்றுன். அதனை முருகப் பெருமான் தனது வேலாயுதத்தால் இருகூருகப் பிளந்தார். (இது நிகழ்ந்த நாள் ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டியாகும்) ஒரு கூறு மயிலாகவும், மற்ருெரு கூறு சேவலாகவும் மாறி முருகப்பெருமானை வணங்கிநின்றன. (சூரன், பதுமன் என்ற ஈருயிர் ஒருடலில் இருந்தமையால் அவை இவ்வாருயின) மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டார். தேவர்கள் சிறையினின்றும் விடுதலைபெற்று மகிழ்ந்தனர். முருகப்பெருமான் திருச்செந்தூர் மீண்டு சிவபூசை செய்து தேவர்கள் சூழத் திருப்பரங்குன்றம் சேர்ந்தார்.

தேவகாண்டம் :-

முற்காலத்தில் திருமாலின் கண்ணீர்த் துளிகளிலிருந்து தோன்றிய அமுதவல்லி சுந்தரவல்லி என்ற இரு பெண்களும் முருகப்பெருமானை மணம் புரிய சரவணப்போய்கையில் தவம் செய்தனர். முருகப்பெருமான், சூரபதுமாதியர்களை ஒடுக்கிய பின்னர் மணம் செய்து கொள்வதாக அப்போழுது அருள் புரிந்தார். அவரது ஆணைப்படி அமுதவல்லி தெய்வயானை என்ற பேயருடன் ஐராவதத்தால் வளர்க்கப்பட்டு இந்திரன் வளர்ப்பு மகளாக வாழ்ந்துவந்தாள். சுந்தரவல்லி தொண்டைநன்ஞட்டில்

சிவமுனிவர் அருள் நோக்கால் மான் வயிற்றில் உதித்து வேட அரசனாகிய நம்பிராஜன் வளர்ப்பு மகளாக வள்ளியம்மை என்ற திருப்பெயருடன் வாழ்ந்துவந்தாள். துயரம் தீர்ந்த தேவர்கள் தங்கள் நன்றிக்கு அடையாளமாக தெய்வயானை அம்மையாரை மணந்துகொள்ளும்படி முருகப்பெருமானை வேண்டினர். முருகப் பெருமானும் கற்பு முறைப்படி அவ்வம்மையாரைத் திருப்பரங் குன்றத்தில் மணந்தருளினார். பிறகு கந்தகிரி சென்று தெய்வயானை அம்மையை அங்கு இருத்தித் தேவலோகத்தைச் சீர்செய்து நல்வாழ்வளித்துத் தொண்டைநாட்டில் உள்ள வள்ளிமலையைச் சேர்ந்தார். அங்கு வேடர்குலமகளாக வளர்ந்து தினைப்புனங் காத்துவந்த வள்ளியம்மையாரைக்கண்டு பல திருவிளையாடல்கள் செய்து அவ்வம்மையாரைக் களவு முறைப் படி மணம் புரிந்து கந்தவெற்பு சேர்ந்தார். அப்பொழுது வள்ளியம்மையார் தெய்வயானையம்மையை வணங்கினார். அவரும் இவரைத் தழுவி ஆசி கூறினார். அதுமுதல் இரு தேவியரும் புடைசூழ வேலேந்திய திருக்கரத்துடன் முருகப் பெருமான் கந்தகிரியில் அமர்ந்து உயிர்கட்கு அன்றும் இன்றும் என்றும் அருள் வழங்க எழுந்தருளி இருக்கின்றார்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோல்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

—கச்சியப்பர்

வாழிய கந்தபுராணம்! வளர்க நம் சொந்தப் பண்பு!

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

வேயா லழிவது வெங்கானிற் பன்மரம் வீடரிய
நோயா லழிவது தேகதிடம் புத்தி நுட்பமில்லாச்
சேயா லழிவது தாய்தந்தையர் மனஞ் செப்புகின்ற
வாயா லழிவது வாழ்வனைத்தும்மறி வாணுதலே. 52

ஐந்திர வ்யாகரணம்

நாவல்பாக்கம், வித்துவான், ஸ்ரீ தேவநாதாச்சாரியார் அவர்கள்.
சரஸ்வதிமகால், தஞ்சாவூர்.

(மலர் 18. இதழ் 3 பக்கம் 180 இன் தொடர்ச்சி)

தேவர்கள் பலருள் வியாகரணம் செய்யும்வேலை மற்றவர்களால் இந்திரனிடமே ஒப்புவிக்கப்பட்டதாக யஜுர்வேதம் கூறுகின்றது. மூவுலகுக்கும் தலைவனாக இருத்தல் அதற்கு ஒரு காரணம். அனேகமாயிரம் ஆண்டுகள் விடாமுயற்சியுடன் ப்ருஹஸ்பதி (சொல்லுக்கதிபதி) யினிடம் அவன் வியாகரணம் கற்றது மற்றொரு காரணம். மஹாபாஷ்யத்தில் இவ் விஷயத்தைக்காணலாம்.

"[1] बृहस्पतिरिन्द्राय दिव्यं वर्षसहस्रं प्रतिपदोक्तानां शब्दानां शब्दपारायणं प्रोवाच , नान्तं जगाम। बृहस्पतिश्च प्रवक्ता इन्द्रश्चाध्येता दिव्यं वर्षसहस्रमध्ययनकालः न चान्तं जगाम।"

இதன் கருத்து:— "பிருஹஸ்பதி இந்திரனுக்கு[2] தேவர்களுடைய கணக்கில் ஆயிரம் ஆண்டுகள் ஒவ்வொரு சொல்லாக வியாகரணம் கற்பித்தார். ஆனால் முடிவுகாணவில்லை. ப்ருஹஸ்பதியே கற்பிப்பவர். இந்திரனே மாணவன். தேவர் வருஷத்தில் ஆயிரம் வருஷங்கள் கற்கும் காலம். ஆனால் கல்வி முடியவில்லை" என்பது. இதனால் மற்றெல்லோரையும் காட்டில் இந்திரனே வியாகரணம் செய்யத்தகுதி பெற்றிருந்தான் என்பது தெளிவு.

ஸாம வேதத்தைச்சார்ந்த சாந்தோக்யோபநிஷத் 2-வது ப்ரச்னம், 22-வது கண்டம், 3-வது வாக்கியம்:—

---

[1] வையாகரண மஹாபாஷ்யம் 1-1-1.

[2] நமக்கு ஒரு வருஷம் எனப்படுவது தேவர்களுக்கு ஒரு நாள், இதன்படி அவர்களுடைய மாதம் - வருஷம் இவற்றையறிக. देवानाꣳ ह्येतदहर्यत्संवत्सरः-தைத்-ஸம்-7-5-1. 'दिव्यं तदह उच्यते'-சூரியசித்தாந்தம்-மத்யமாதிகாரம்-13வது சுலோகம்.

"सर्वे [1] स्वरा इन्द्रस्यात्मानः, सर्वे ऊष्माणः प्रजापतेरात्मानः, सर्वे स्पर्शा मृत्योरात्मानः, तं यदि स्वरेषूपालभेत इन्द्रं शरणं प्रपन्नोऽभूवं, स त्वा प्रतिवक्ष्यतीत्येनं ब्रूयात्"

என்பது. இதன் பொருள்:— "உயிரெழுத்துக்கள் யாவும் இந்திரனுடைய உடலின் உறுப்புக்களானவை. ஊஷ்மாக்ஷரங்கள் யாவும் (ச-ஷ-ஸ-ஹ) ப்ரஜாபதியின் உறுப்புக்கள். மெய் யெழுத்துக்கள் யாவும் ம்ருத்யுவின் உறுப்புக்கள். ஸாமம் பாடுகிறவனை உயிரெழுத்துக்களில் தவறியதாகக் கூறினால், 'இந்திரனை சரணடைந்துள்ளேன். அவன் உனக்குப் பதில் சொல்வான்' என்று சொல்லவேண்டும்" என்பது. பூர்வமீமாம்ஸாதர்சனம்-9வது அத்தியாயம்-முதல்பாதம், நான்காவது அதிகரணத்தில், சப்தமே தேவதை, சப்தத்தினின்றும் அதன் பொருளான தேவதை தனியாக ஒன்றும் இல்லையென்னும் கொள்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த முறையில் பார்த்தால் நாம் சொல்லுகிற மந்திரங்கள் எல்லாம் தேவர்களின் உடல் உறுப்புக்களேயாகும். உயிரெழுத்துக்கள் முழுதும் ஈண்டு இந்திரனது உடலின் உறுப்பாகக் கூறப்படுகின்றன. நமது உடலில் உள்ளே யிருக்கும் உயிர் சுதந்திரமானதும் முக்கியமானதுமா யிருக்கக் காண்கிறோம். அதுபோலவே எழுத்துக்களிலும் மெய்யெழுத்துக்களைக் காட்டிலும் உயிர் எழுத்துக்கள் அதிக முக்கியத்வம் உடையவை. உயிர்-மெய் என்னும் பெயரே இதை எடுத்துக்காட்டவல்லது. அவ்வாறு முக்கியமான உயிரெழுத்துக்கள் இந்திரனது வடிவமாகவமைந்தமையின், முதன் முதலில் வியாகரணம் செய்யும் பொறுப்பைத் தேவர்கள் அவனிடமே ஒப்புவித்தனர். [2] ஆதிகாலத்தில் நான்முகனுடைய விருப்பத்திற்கிணங்க இந்திரனும் சந்திரனும் பரமசிவனும் வியாகரணம் இயற்றினர் என்பதும், அவற்றுள் சிவபெருமான் இயற்றிய வியாகரணத்தைத் தழுவியதே பாணினி முனிவரின் வியாகரணமென்பதும் உண்மை.

---

[1] ஸ்வரம் என்னும் சொல் ஈண்டு க்ருஷ்டம் முதலியவற்றையும் குறிக்கும்.

[2] Vide Introduction page 7. History of Classical Sanskrit Literature by M. Krishnamachariyar.

ஆதிகாலத்தில் இவ்வாறு சிறந்து விளங்கிய ஐந்திரவ்யாகரணம் பிற்காலத்தில் தோன்றிய பற்பல வியாகரணங்களால் நாளடைவில் மறைந்துவிட்டது. ஆனால் வியாகரணம் இயற்றினவர்கள் யாவருக்கும் வழிகாட்டியாக ஐந்திரவியாகரணம் இருந்ததென்பது மட்டும் உண்மை. உலகவழக்கு ஆற்றுவெள்ளம் போன்றது. ஒரு ஸமயத்தில் வழங்கப்படும் சொற்கள் பிற்காலத்தில் தேய்ந்து உருமாறி மறைந்துவிடுகின்றன. அப்பொழுது அந்தச் சொற்களுக்காக ஏற்பட்ட வியாகரணமும் அவசியம் குறைந்ததாகிவிடுவது இயல்பே. பழைய வியாகரணங்கள் சரிவரக் காப்பாற்றப்படாமல் குலைந்து போனமையும் மற்றொரு காரணமாகும். அதேபோல் புதிதாகத்தோன்றி வழங்கிவரும் சொற்கூட்டங்களுக்கு வேறொரு வியாகரணமும் அவசியமாகிவிடுகின்றது. பாணினி முனிவர் தமது உலகப்பிரசித்தி பெற்ற வியாகரண சூத்திரங்களில், பலவிடங்களிலும் தனக்கு முன்னம் இருந்த வியாகரணகர்த்தாக்கள் பலரைக் குறிப்பிடுவது இவ்வுண்மையையே உறுதிப்படுத்துகின்றது. ஆனால் என்றும் வியாகரணத்தின் துணையுடனே வழங்கிவருவதான ஸம்ஸ்க்ருத மொழியில் அவ்விதமான மாறுபாடுகள் எளிதல் இடம்பெறு; அவ்வாறு தோன்றினும் மிகமிகச்சிறிய அளவிலேயே தோன்றும்; என்பது, சிற்சில விடங்களிலேயே பாணினி முனிவர் வேறு வியாகரண கர்த்தாக்களின் கருத்து வேற்றுமையைக் குறிப்பதனாலும், தானும் அதை விகல்பமாக ஏற்றுக் கொள்வதனாலும் தெளிவாகின்றது.

'तामिन्द्रो मध्यतोऽवक्रम्य व्याकरोत्'

(தாமிந்த்ரோ மத்யதோऽவக்ரம்ய வ்யாகரோத்)

என்கிறபடி முதன்முதலில் சொல்லை மத்தியில் பிளந்து வியாகரணம் செய்த பெருமை மட்டும் இந்திரனுடையதே. ஏனைய வியாகரணகாரர்கள் யாவரும் இவ்விஷயத்தில் இந்திரனின் முயற்சியை உதாஹரணமாக மனதில் கொண்டு, தங்கள் வியாகரணங்களை இயற்றினர்.

தொல்காப்பியம்-சிறப்புப்பாயிரத்தில்; "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோனே" என்று பனம்பாரனார் கூறி யிருப்பதும்

இக் கருத்தையே உட்கொண்டது என்பது எமது கருத்து. [1] முதன்முதலாகத் தமிழ்மொழிக்கு இலக்கணம் எழுதும் ஒருவர் ஸம்ஸ்க்ருதபாஷையின் இலக்கணமாகிய ஐந்திரவியாகரணத்தை நன்கறிந்தவராகச் சிறப்பித்துக் கூறப்படுவதன் கருத்து இதுவேயாகும். முதன் முதலில் ஸம்ஸ்க்ருதமொழிக்கு வியாகரணம் செய்த "இந்திரன்" பகுதி விகுதிகளைப் பிரித்த வழியைப் பின்பற்றியே தானும் இனி வியாகரணம் செய்ய விரும்பும் மொழியின் சொற்களுள் பகுதி விகுதிகளைப் பிரித்து இலக்கணம் கூறப்போவதாகத் தொல்காப்பியனாரின் திருவுள்ளம் இருந்ததென்பது தேற்றம். அதனாலேயே இந்திரனைத் தவிர மற்ற வியாகரணகாரர்கள் எவரையும் அவர் ஈண்டு குறிப்பிடவில்லை.

நன்னூல் - மயிலைநாதருரை - பெயரியல் சூத்திரம் - 290. இந்திரனெட்டாம் வேற்றுமையென்றனன்" என்றார் அகத்தியனாரென்க என்றும்; சங்கர நமச்சியவாயருரை பெயரியல்-சூத்திரம் 291. "இந்திரனெட்டாம் வேற்றுமை யென்றனன்" என ஆசிரியர் அகத்தியனாருங் கூறுபவாகலின்" என்றும் கூறுவதனால் ஐந்திரவியாகரணத்தின் வழியிலேயே சென்று அகத்தியனார் "அகத்தியம்" என்னும் இலக்கண நூலை இயற்றினார் என்பது அறியப்படுகின்றது. இந்திரன் - என்னும் சொல்லுடன் "அவனால் செய்யப்பட்டது" என்னும் கருத்தையுணர்த்தும் விகுதியைச் சேர்த்து "ஐந்திரம்" என்னும் சொல்லை உருவாக்கும் முறை ஸம்ஸ்க்ருதமொழியின் இலக்கணத்தை அடியொற்றியே ஏற்பட்டது. இது கொண்டும் ஐந்திரவியாகரணம் ஸம்ஸ்க்ருதத்திற்கே ஆதி காலத்தில் தோன்றியதென்பது உறுதிப்படும். உண்மை இவ்வாறிருக்கத் தமது கற்பனைகளையே

---

[1] "முந்து நூல்கண்டு" என்று இப்பாயிரத்திலேயே கூறப்பட்டிருத்தலின் இதுவே முதன்முதலில் வியாகரணம் என்று கூறுவது அவ்வளவாகப் பொருத்தமுடைத்தன்று. "ஆனாப் பெருமையகத்தியனென்னும் அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்" என்னும் சான்றால் "அகத்தியம்" என்னும் முதனூல் இருந்தது என்பதுவும் தெளிவு. ஆயினும் தற்பொழுது அவை கிடைக்காமையின் இதனையே கௌணமாக அவ்வாறு குறிப்பிட்டனம்.

ஆதாரமாகக்கொண்டு பலர் பலவாறாகப் பேசுவதும் எழுதுவதும் வியப்பையே தரும்.

ஐந்திரவியாகரணத்தின் அறிவு தொல்காப்பியனாருக்கு இருந்ததன் விளைவு எத்தன்மையதென்பது விரிவான ஆராய்ச்சிக்குரிய விஷயம். ஸம்ஸ்க்ருதத்திற்கும் தமிழுக்கும் பொதுவாகவுள்ள பல விஷயங்களை இங்கு குறித்தல் தகும். ஸம்ஸ்க்ருதத்தில் வேற்றுமைகள் எட்டு. அவை தமிழிலும் அவ்வாறே இடம் பெற்றுள்ளன, [1] "विभक्तयो भवन्ति वाचो विधृत्यै" (விபக்தயோ பவந்தி வாசோ வித்ருத்யை) என்னும் யஜுர்வேத வாக்கியம் ஒரு மொழியின் ஜீவாதாரமான பகுதியாக விபக்திகளை (வேற்றுமைகளை)க் கூறுகிறது. பகுதியை முன்பும் வேற்றுமையுருபைப் பின்னும் சேர்ப்பது இரண்டு மொழிக்கும் பொதுவான வழக்கு. வினைச்சொல் வாக்கியத்தின் முடிவிலேயே இடம் பெறுவதும், சிறப்பாகச் சில கருத்துக்களை யுணர்த்த வேண்டும்போது அது முதலில் வைக்கப்படுவதும் அப்படியே. இப்புடைகளில் ஊன்றி ஆராய்ந்தால் மற்றும் பல விஷயங்கள் புலனாகும். உண்மையை ஆய்ந்துணர்வதில் ஆவலும், தைரியமாக அதை எடுத்துரைக்கும் ஆற்றலும் மிக்க அறிஞர் பலர் ஒன்றுகூடி இதுபோன்ற விஷயங்களை உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

[2] "ஊழி தோறூழி உலகுக்கு நீர் கொண்டு" என்பது நம்மாழ்வாருடைய செஞ்சொற்கவி. "இந்த ஊழியில் போல் முன்பும் மேகங்கள் உலகுக்கு நீர் கொண்டு செல்வதையே தம் தொழிலாகக்கொண்டிருந்தன" என்பது இதனின்றும் புலனாகின்றது. "सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत्" (ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்) என்னும் உபநிஷத் வாக்கியம், "இறைவன் சூரியனையும் சந்திரனையும் முன்போலவே படைத்தான்" என்கிறது. "न कदाचिदनीदृशं जगत्" (ந கதாசிதநீத்ருசம் ஜகத்) "உலகம் இற்றைக்கு மாறாக எற்றைக்கு மிருந்ததில்லை." என்கின்றனர் மீமாம்ஸகர்கள். உலகம்

---

[1] தைத்-ஸம்-காண்டம்-1 ப்ரச்னம்-5. அனுவாகம்-2.

[2] திருவாய்மொழி-2-1-5.

தோன்றுவதும் மறைவதும், மத்தியகாலத்தில் அதன் நிலையும் ஒரேவிதமாகத்தான் நடக்கின்றது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதியந்தமில்லாத காலப்பிரவாகத்தில் ஒன்றைப் பழமையானதென்றும், மற்றொன்றைப் புதியதென்றும் கொள்ளுவதும், அதன் காரணமாகச் சிறிது ஏற்றத்தாழ்வு பாராட்டுவதும் நன்றாகாது. தோன்றும்போது எல்லாம் புதிதுதான். நாளடைவில் அது தொன்மை பெற்று விடுதலும் தேய்ந்து மறைந்து விடுதலும் இயல்பே. "पुराणमित्येव न साधु सर्वं" (புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்) என்பது காளிதாஸருடைய பொன்மொழி. 'பழமை-புதுமை-காரணமாக உயர்வு தாழ்வு இல்லை'' என்பது இதன் கருத்து. இந்த நோக்குடன் ஆராய்ச்சி செய்பவருக்கு உண்மையைத் திரித்துக் கூறவேண்டிய அவசியம் ஏற்படாது. இதே கொள்கையுடன் ஆராய்ச்சி செய்து ஐந்திர வியாகரணம் பற்றி எமக்குத் தெரிந்ததைப் பாரபட்சமின்றி இக்கட்டுரையில் விளக்கினோம். இதனை அறிஞர்கள் அருள்கூர்ந்து நோக்கிக் குற்றங்களைந்து குணத்தைக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

இன்று நண்பர்களுடன் திருக்கோவிலுக்குத்தெரிசனத்திற்காகச் சென்றேன். தம்பிரான் சுவாமிகளும் மற்றவர்களும் உடனிருந்து சிறந்த முறையில் வழிபட ஏற்பாடுகள் செய்தமைக்காக எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். பொதுவாகத் தருமபுர ஆதீனக் கோவில்கள் மிகவும் சுத்தமாக வைத்திருப்பதைப் பாராட்டுகின்றேன்,

(Sd.) பி. டி, ராஜன்,

23—1—59.

விரதம்

சிரோமணி, பிர்ம ஸ்ரீ K. இராஜகோபால சாஸ்திரியார்,

வடமொழி ஆசிரியர், ஆகம பாடசாலை, தருமபுரம்.

அருகம்புல் எங்கும் எளிதில் கிடைக்கக்கூடியது. அதைப் பக்தியுடன் கணேசனுக்கு அர்ப்பணம் செய்தால் மிகவும் உத்தமமானபயனைப்பெறலாம். பொருளில் உயர்ந்தது தாழ்ந்தது என்ற பாகுபாடு இல்லை. கொடுக்கும் காலத்தில் பக்திதான் மிகச் சிறிய பொருளையும் உயர்ந்ததாகச் செய்கிறது.

भक्त्या दत्तं स्वल्पमपि बहु तृप्तिकरं मम ।
अभक्त्या यच्च दम्भेन बहुदानं वृथा भवेत् ॥

"கொடுக்கப்படும் பொருள் கொஞ்சமாக இருப்பினும் எனக்கு பக்தியுடன் கொடுக்கப்படுவது மிகுந்த திருப்தியைக் கொடுக்கிறது. பக்தியின்றி ஆடம்பரத்தோடு அதிகமாகக் கொடுப்பினும் அது வீணே" என்று கணேசபுராணம் கூறுகிறது. கொஞ்சமாக இருப்பினும் பக்திவேண்டும் என்பதை இந்த சுலோகம் வலியுறுத்திற்று. ஸ்ரீ பகவத்கீதையில்,

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृत मश्नामि प्रयतात्मनः ॥

பரிசுத்தமான மனதுடன் இலையோ, மலரோ, கனியோ, நீரோ எதுவாயினும் பக்தியுடன் எனக்கு அளிப்பதை, பக்தியுடன் அளிக்கப்பட்டது என்ற காரணத்தால் நான் உண்டு மகிழ்ச்சி அடைகிறேன்" என்று எப்பொருளாயினும் பக்திவேண்டும் என்பதை வலியுறுத்திற்று.

எளிதில் கிடைக்கக்கூடிய மிகச் சாதாரணமான ஒரு பொருளை ஈசனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு "ஈசனே எனக்கு அழியாச் செல்வம் வேண்டும். நல்ல பிள்ளை வேண்டும். அரசும் புகழும் வேண்டும், மோக்ஷம் வேண்டும் என்று ஜனங்கள் கடவுளிடம் வேண்டுகின்றனரே, இது எவ்வாறு பொருந்தும். மிகச்சிறிய பொருளைப் பெற்றுக்கொண்டு பேரிய பயனை எப்படிக் கொடுப்பர்? கடவுளை ஏமாற்றும் எண்ணமா? என்று ஐயம் தோன்றலாம். கொடுப்பவனுடைய பக்தியினால், அக்காலத்தில்

சொல்லும் மந்திரங்களின் பெருமையினுல் கொடுக்கப்பட்ட பொருள் கடவுளுக்கு விருப்பமான பொருளாக ஆகும்; வேண்டிய அளவுள்ளதாகவும் ஆகும் என்று ஜைமினி முனிவர் வேதத்தின் பொருளை விசாரிக்கும் சாஸ்திரமாகிய மீமாம்ஸையில் விரிவாகக் கூறியுள்ளார்.

ஆனுல் பக்தி யிருந்தால் போதுமானது; பொருட்செலவு செய்யவேண்டுவதில்லை என்று லோபத்தால் நினைத்து தனது செல்வநிலைக்கேற்ப பொருட்செலவு செய்யாமலிருப்பதும் சரி யாகாது. நாம் செய்யும் கர்மங்கள் எல்லாம் பொதுவாக நித்தியம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று வகைப்படும். தினம் காலையும் மாலையும் சந்தியாவந்தனம் செய்யவேண்டும். உயிர் உள்ளவரையில் அக்னிஹோத்திரம் செய்யவேண்டும் என்பன போன்றவை நித்தியமாகும். உடல்நலக் குறைவினுலோ பொருட் குறைவினுலோ வேறுவகையான இடையூறுகளாலோ இம்மாதிரி யான நித்திய கர்மங்களை ஒரு குறைவுமின்றி கடைசி வரையில் நடத்த யாராலும் முடியாது. சிவபூசை செய்பவன் ஒருநாள் மலர் இல்லாவிடில் பத்திரத்தை உபயோகப்படுத்துகிருன். பால் இல்லையேல் நீரால் அபிஷேகம் செய்கிருன். ஆதலால் முடிந்த வரையில் செய்யவேண்டியனவே. இதை மீமாம்ஸகர் யதாசக்தி ந்யாயம் (சக்திக்கேற்பச் செய்தல்) என்பர். ஒரு குறிப்பிட்ட நிமித்தம் (காரணம்) நிகழுமாயின் செய்யவேண்டுமென விதிக்கப் பட்ட கர்மங்கள் நைமித்திகம் எனப்படும். நைமித்திக கர்மங் களையும் நித்தியகர்மங்களைப்போல் அவசியம் செய்தே ஆக வேண்டும். ஆதலின் இவைகளைச் செய்தலும் யதாசக்தி ந்யாய மாகவே கொள்ளப்படும். விரும்பிய பயனைப்பெற விதிக்கப்பட்ட கர்மங்கள் காம்யம் எனப்படும். காம்யகர்மங்களை ஒருவிதக் குறைவுமின்றிச் செய்தால்தான் பயனை அடையமுடியும். விரதங் கள் யாவும் காம்யகர்மங்களே. ஆதலின் விதிகளில் சொல்லப் பட்டபடி செய்யவேண்டுமேயன்றி குறைத்துச்செய்தல் கூடாது. “அதிகஸ்ய அதிகம் பலம்” மிகுதிக்கு மிகுந்த பயன் என்று சொல்லியிருப்பதால் விதியை மீறி அதிகமாகச் செய்வதும் போற்றத்தக்கதில்லை. மிகுதிக்கு மிகுந்த பயன் என்பது தானத் திற்குப் பொருந்துமேயன்றி மற்றவற்றிற்குப் பொருந்தாது. ஆதலால் விரதங்களைச் சொல்லப்பட்டபடி செய்வதே உத்தமம்.

நித்தியகர்மங்களுக்குப் பயன் கிடையாது. ஆனுல் செய்யா விடில் பாபம் உண்டாகும். ஆகவே பாபம் ஏற்படாமலிருக்க

நித்திய கர்மங்களை அவசியம் செய்யவேண்டும் என்றனர் மீமாம்ஸகர். ஆனால் வேதாந்திகள் பாபம் ஏற்படாமலிருப்பதற்காகச் செய்யப்படும் நித்தியகர்மங்களினால் சித்தசுத்தி (மனத்தூய்மை) என்ற பயனும் அவைகளுக்கு உண்டு என்றனர்.

सुसंख्या सफला पूजा संख्याहीना तु निष्फला

ஜபம், பூசை, ஹோமம் இவைகளை எண்ணிக்கையுடன் செய்தால்தான் பயனுண்டு. எண்ணிக்கையின்றி ஜபமோ, ஹோமமோ செய்தால் பயனில்லை என்றும் கூறுகிறது முனிவர் வாக்கியம். ஆதலின் எதையும் எண்ணிச் செய்யவேண்டும். ஆற்றில்போட்டாலும் அளந்துபோடு என்பது பழமொழியன்றோ?

லக்ஷதூர்வாபூசை :

ஆவணிமாதம் சதுர்த்தியில் செவ்வாய்க்கிழமை வருமாயின் அன்று இந்த பூசை தொடங்கிச் செய்யவேண்டும். அல்லது மாசி, கார்த்திகை, புரட்டாசி மற்றும் புண்ணிய மாதங்களிலும் இவ்விரதத்தைச் செய்யலாம். விநாயகரை ஆவாகனம் செய்து லக்ஷம் அருகம்புற்களால் பூசிக்கவேண்டும். பிறகு இருபத்தொரு ரித்விக்குகளை (உடன் இருந்து யாகத்திற்கு சாதகம் செய்பவர் யஜமானனுக்கு பிரதிநிதியாக) சேர்த்துக்கொண்டு 10000 ஹோமம் அருகம்புற்களால் செய்யவேண்டும்.

त्वं दूर्वेऽमृतजन्मासि वन्दितासि सुरासुरैः ।
सौभाग्यं सन्तति देहि सर्वकार्यकरी भव ॥
यथा शाखाप्रशाखाभिः विस्तृतासि महीतले ।
तथा ममापि सन्तानं देहि त्वमजरामरे ॥

"ஏ அருகம்புல்லே ! நீ அமிர்தத்தில் பிறந்தவள். தேவாசுரர்களால் வணங்கப்படுகிறாய். எனக்கு சௌபாக்யத்தையும், சந்ததியையும் கொடு. என்னுடைய எல்லாக் காரியங்களையும் செய்பவளாக இரு. நீ கிளைகளாலும், சிறு கிளைகளாலும் பூமியில் எப்படி பரவி இருக்கிறாயோ அதுபோல எனக்கு சந்ததியைக் கொடு" இந்த இரண்டு சுலோகங்களும் தூர்வாமந்திரம் எனப்படும். இதேபோல் பொருள்கொண்டது,

काण्डात्काण्डात्प्ररोहन्ती परुषः परुषः परि

என்ற வேதமந்திரம்.

இந்த விரதம் சந்தான அபிவிருத்திக்காகச் செய்யவேண்டியதாகும். இது கணேச புராணத்தில் லக்ஷதூர்வா பூஜாவிதி படலத்தில் கூறப்பட்டிருக்கிறது. கணேசனுக்கு நிவேதனமாக வைக்கப்படுகின்ற பொருள்கள் ஒவ்வொன்றும் இருபத்தொன்ருக இருப்பது சிறந்தது.

एक विंशतिसंख्यानि नालिकेरफलानि च ।
रम्भाजम्बु कपित्थानि इक्षुखण्डांश्च तावतः ॥
उर्वारुक तथापूपान्मोदकान् लड्डुकानपि ।
एवं संख्यैश्च विप्रेन्द्र नैवेद्यं कारयेन्मुदा ॥

தேங்காய், வாழைப்பழம், நாவற்பழம், விளாம்பழம், கரும்புத் துண்டு, வெள்ளரிக்காய், வடை, மோதகம், இட்லி இவைகளை இருபத்தொன்று எண்ணிக்கை கொண்டனவாக நிவேதிக்க வேண்டும்.

கணேசனுக்கே " ஏகவிம்சத்யங்குலிபல்லவ " என்று ஒரு நாமம் உண்டு. தளிர்போன்ற இருபத்தோறு விரலுடையவர் என்பது அப்பெயரின் பொருள். இப் பூசையிலும் இருபத்தோறு ரித்விக்குகள், இருபத்தோறு புஷ்பங்களாலும், இருபத்தோறு பத்திரங்களாலும் பூஜிக்கவேண்டும்.

வைகாசி பௌர்ணமியில் இராதை கணேசரைப் பூஜித்து ஸ்ரீராமருடைய சாபத்தினின்றும் விடுபட்டு கண்ணனை அடைந்தாள் என்று வருகிறது. அங்கு பார்வதி இராதையைப்பார்த்து,

सर्वादौ सर्वपूज्योऽयं यथानव ॥

" நீ பூஜித்ததுபோல் இந்த கணேசர் எல்லோராலும் எல்லாக் காரியங்களின் ஆரம்பத்திலும் பூஜிக்கத்தக்கவர் " என்று கூறுகிருள். அதை அனுசரித்தே இந்தக்காலத்தில் யாவரும் காரிய ஆரம்பத்தில் பூஜித்து,

वक्रतुण्ड महाकाय सूर्यकोटिसमप्रभ ।
अविघ्नं कुरु मे देव सर्वकार्येषु सर्वदा ॥

வளைந்த முகமும், பருத்த உடலும், கோடி சூர்யனை ஒத்த ஒளியும் உடையவரே எல்லாக் காரியங்களிலும் எப்பொழுதும் இடையூறு இன்மையைச் செய்யும் என்று மக்கள் வேண்டுகின்றனர்.

முப்பொருள் விளக்கம்

தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைமணி,

வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 18, இதழ் 5, பக்கம் 308 இன் தொடர்ச்சி)

'சிவமும் சத்தியும், தலைவனும் தலைவியுமாய் நிற்பினும், வேறு வேறு முதல்களாகாது ஒரு முதலேயாய்த் தற்கிழமை வகையான், முதலும் அதனது பேற்றியுமாய் இருதிறப்பட் டியைந்து நிற்கும்' என்பது,

" நங்கையினால் நாம்அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினாற் செய்தளிக்கும் நாயகனும்; - நங்கையினும்
நம்பியாய்த் தான்நடுவே நாட்டப் பெறும்; இதுகாண்
எம்பெருமா னார்தம் இயல்பு "

எனவும்,

" பொன்நிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் - செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்பள், எங்கள் சிவபதியும்
அந்நிறத்த னாயிருப்பன் ஆங்கு "

எனவும்,

" தாரத்தோ டொன்றுவர்; தாரத்தோர் கூறுவர்;
தாரத்தோ டெங்கும் தலைநிற்பர்; - தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர்; நாற்றானத் தேயிருப்பர்;
வேதாந்தத் தேயிருப்பர் வேறு "

எனவும் திருக்களிற்றுப்படியினும், (78, 79, 80).

" ஆணையின் - நீக்கம் இன்றி நிற்கும் அன்றே " எனவும், " பொன்னொளிபோல் ஈசன் " எனவும், சிவஞானபோதத்தினும், (சூ - 2. அதிகரணம் - 4.)

" அருளை யின்றித் - தெருள்சிவம் இல்லை அந்தச்
சிவமின்றிச் சத்தி இல்லை "

எனவும், ('ஆணை' 'அருள்' என்பன சத்தியின் பெயர்கள்)

" சத்திதான் மரமும் காழ்ப்பும் - இருமையும்
போல மன்னிச் சிவத்தினே டியைந்து நிற்கும் "

எனவும்,

" ச்த்திதான் நாத மாதி தானுகும் ; சிவமும் அந்தச்
சத்திதா னுதி யாகும் ; தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் ; சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம் ; சத்தன் வேண்டிற் றெல்லாமாம் சத்திதானே "

எனவும்,

" எத்திறம் நின்ருன் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள் " எனவும், சிவஞான சித்தியினும் (சூ. 5-ல் 9, 1-ல் 67, 2-ல் 75, 76.)

" தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான் "

எனத் திருவருட் பயனிலும் (அதிகாரம் 1-ல் 2) விளக்கப்பட்டது.

உலகிற்கு முதலாய பேரும்பொருள், இங்ஙனம் சிவமும் சத்தியும் என இருவகையாய் இயைந்து நிற்றலானே, உலகுயிர்கள் எல்லாம் குறிகளாலும் குணங்களாலும் ஆண், பெண் என இருதிறப்பட்டு நின்று தம்முட் கலந்து வாழ்கின்றன என்க. எனவே, உலகுயிர்களின் வாழ்க்கையை உற்றுநோக்கின், உலகிற்கு முதற்பொருளாய பேரும்பொருளும் இத்தன்மைத்தாதல் உணரப்படும் என்பதாம்.

" அம்மையப்ப ரேஉலகிற் கம்மையப்ப ரேன்றறிக " (திருக்களிற்றுப்படி - 1) என்றருளிச் செய்ததூஉம் இதுபற்றி - இனி,

" தந்தை தாய்ப்பேண் " எனவும், (ஆத்திசூடி - 20)

" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " எனவும் (கொன்றைவேந்தன் - 1) ஓதியனவும் இப்பொருள்மேல் நோக்குடையவாதல் அறிக.

முதற்பொருள் இங்ஙனம் சத்தியும் சிவமுமாய் இயைந்து நிற்கும் தன்மை உலகுயிர்கள் எல்லாவற்றினும் வைத்தறியப்

படுமாற்றினையே, திருநாவுக்கரசு நாயனார் தமது திருக்கயிலைக் காட்சித் திருப்பதிகத்தில், பலபட விரித்தருளிச் செய்தமை காண்க.

இனி முதற்பொருள் தன்னைக் கண்கூடாகக் காணலுறுவார்க்கு உருவாய்த் தோன்றுங்கால், சிவமும் சத்தியுமாய் நிற்கும் தன்னியல்புக்கேற்ப அம்மையப்பர் வடிவாய்த் தோன்றுதல்போலவே, அவ்வுருவிற்கும் அருவிற்கும் பொதுவாய அருவுருவாய்த் தோன்றுங்கால், பீடத்தோடு கூடிய இலிங்கமாய்த் தோன்றும். அதனாலும், முதற்பொருள் அவ்வாறு இருதிறப் பட்டியைந்து நிற்றல் உணர்ந்துகொள்ளப்படும்.

இங்ஙனம் முதற்பொருள், சத்தியும் சிவமும் என இரு திறனாய் இயைந்து நிற்பது என்றற்கு உலகனைத்தும் சான்றாய் நிற்பவும் அதனை உணர்ந்துகொள்ளமாட்டாது, அதன் இயல்பினை வேறு வேறு கூறுவார்க்கு உணர்த்தும் வாயில் இல்லை. இதுபற்றியே,

" ஒன்றுரைத்த தோன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் ; - இன்றுரைக்க
என்னால் இயன்றிடுமோ ! என்போல்வார் ஏதேனும்
சொன்னால்தான் ஏறுமோ ! சொல் "

எனவும்,

" யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சினையே - ஆதலினால்
பேதமே செய்வாய் ; அபேதமே செய்திடுவாய் ;
பேதாபே தம்செய்வாய் பின் "

எனவும் திருக்களிற்றுப்படியினும், (81, 82.)

" சத்தியும் சிவமும் ஆய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தோவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தனன் ; அவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் ; பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார் "

எனச் சிவஞான சித்தியினும் (சூ. 1-ல் 69.) ஓதப்பட்டன.

இனிப், பீட லிங்கங்களை முதற்பொருளது தன்மைகளாகிய சத்தி சிவங்களாகக் கண்டு வழிபட்டுய்யும் பொறியிலாதார் சிலர், கல்லா மாக்களிடைக் கதைசில பற்றி, அவற்றை உலகத்துள்ளாரது புலாலுடம்பின் குறிகளாகவே கூறிப்போவர். அவர் தம் கூற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மக்களை ஈன்று சான்றோராக்கிவரும் தாய் தந்தையரை, அன்பும் அறனுமாகிய பண்பும் பயனும் பெற்ற கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டினை யுடைய இருமுது குரவரெனப் போற்றல் செய்யாது, காமங் காழ்கொண்ட காமுகரே எனத் தூற்றல் செய்வார் கூற்றேெ டொக்குமென் றொழிக.

மாணாக்கன் :

இதுகாறும் விளக்கியவாற்றால், சிவமும் சத்தியும் வேறு வேறு முதல்கள் அல்ல என்பது பெறப்பட்டதாயினும், சத்தி யாகிய உமையம்மை சிவத்தினின்றும் நீங்கி நிலவுலகின்கண் வந்து, சிவனை வழிபட்டாள் எனவும், அவ்வாறே சிவபிரானும் உமையம்மையோடு செல்லாது சிலவிடத்து அவளை நீங்கிச் சென்று சில செய்தான் எனவும், மற்றும் இன்னோரன்னவாக வரும் வரலாறுகள் திருமுறைகளுள்ளும் கேட்கப்படுதலின், அவர் இருவரும் நீக்கமின்றி நிற்கும் ஒருமுதற்றன்மையர் ஆகாது, நீங்கி நிற்றற்குரிய இருமுதல்களேயாதல் பெறப்படு கின்றதன்றோ ?

ஆசிரியர் :

அறியாது வினாயினாய் ! என்னையெனின், அங்ஙனம் கேட்கப் படும் வரலாற்று நிகழ்ச்சிகளிடத்தும், அவ்விருவரும் ஆண் டாண்டுத் தோன்றிய அவ்வவ் வடிவளவினராகாது, யாண்டும் நிறைந்துநிற்கும் பெருநிலையினரே என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், அங்ஙனம் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் நீங்கினாற்போல நின்றதூஉம் ஓர் அருள்நாடகமே என்பது அறிந்திலை யாகலின் அவையெல்லாம் அருள்நாடகமே என்றற்கு அவ்வரலாறுகளைக் கூறுமிடத்திற்றானே அவ்வவ்வாசிரியரால் குறிக்கப்படும் சொற்குறிப்புக்கள் உள ; அவற்றை ஓர்ந்துணர்க. இனி, இவ்வாறன்றி அம்மையப்பரை இருமுதல்களெனவே கோடு மேனின், அவ்விருவரையும் சத்தி சத்திமான் என்றல் கூடாமை ஒன்றோ, சத்தி சத்திமான்களின் இயல்புணரமாட்டாமை ஒன்றோ இரண்டனுள் ஒன்றுபடுமென்க.

மாணாக்கன் :

அற்றேல், சத்தி சத்திமான்களின் இயல்புதான் யாதோ ? அதனை அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர் :

சத்தி என்பது ஒருபொருளின்கட் பல்வேறு வகையாக வகுத்துணரநிற்பது ; சத்திமான் என்பது, அவ்வகை அனைத்தையும் உடைய ஒன்ருகத் தொகுத்துணரநிற்பது. குண குணிகளின் இயல்பினையும் இவ்வாறே யுணர்க.

சத்திகளது தொகுதியே சத்திமானும், குணங்களது தொகுதியே குணியும் ஆவனவல்லது அவை வேறு வேருவன அல்ல என்க. இவற்றை,

" முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே "

எனவும்,

" பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே "

எனவும் கூறிய நயம்பற்றி உணரவைத்தார், ஆசிரியர் தொல்காப்பியனுரும் என்க. (சொல் - 89, 90.)

மாணாக்கன் :

அற்றேல் அம்மையப்பரை இரு சத்திமான்களென்னது சத்திமான்களென்றே கோடற்குச் சான்றென்னை ?

இருவரும் இரு சத்திமான்களாயின், " எத்திறம் நின்ருன் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள் " எனவும், " சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே " எனவும் மேற்காட்டியாங்கு, அவ்விருவரும் யாண்டும் ஒருவாற்ருனும் ஒருசிறிதும் பிறழாது ஒருங்கியைந்து நிற்றல் கூடாமையின், அம்மையும் அப்பனுமாய அவ்விருவரும் சத்தி சத்திமான்களே என்பது இனிது பெறப்படும் என்க.

சத்தியும் சிவமும், அம்மையும் அப்பனுமாய் நிற்கும் வடிவு வேறுபாடும், செயல் வேறுபாடும்பற்றி வேறு வேறு முதல்கள் போலும் என மலையாமைப் பொருட்டன்றே மேல், " சத்திதான் நாதமாதி தானுகும் ; சிவமும் அந்தச் சத்திதா னுதியாகும் "

என வகுத்தும், " தரும்வடிவான வெல்லாம் சத்தியும் சிவமு மாகும் " எனத் தொகுத்தும் அவ்விரு வேறு வடிவங்களும் இருவர்க்கும் பொதுவாவனவே யன்றி, ஒருவர் வடிவின் மற்றவர்க்கு இயைபில்லாமை இல்லை என விளக்கிய தென்க. " பெண்உரு ஒருதிறன் ஆகின்று " என்ற சான்றோரும், பின்னர் " அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் " என்றதூஉம் காண்க.

இங்ஙனம் சிவமும் சத்தியும் ஒன்றே யல்லது வேறல்ல என்றதனுன், அவற்றுள், ஒன்றற்கு உயர்வும், பிறிதொன்றற்குத் தாழ்வும் கற்பித்து 'சத்தியினும் சிவமே உயர்ந்தது' என்னும் சைவரில் ஒரு சாரார் மதமும், 'சிவத்தினும் சத்தியே உயர்ந்தது' என்னும் சாத்தேயர் மதமும் அடா என்க.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

We visited the temple to-day. There is divenity apparent in every part of it.

(Sd.) V. Palaniswamy Coimbatore.

(Sd.) A. V. Srinivasa Naidu.

One of the best and well maintained temple by Dharmapuram Mutt.

(Sd.) T. S. Ramadurai,
B/O T. S. Pattabiram, M.A.B.L.M.P.
Tiruchengodu, Salem Dt.

I visited the temple to-day. This is one of the well maintained temples, I have so far seen. It is neat and well kept.

(Sd.) S. Rajam,
163/V, Royapettah High Road,
Mylapure Madras 4. 25—12—58.

(Sd.) T. N. Arunachalam,
Underwood 179, North Veli Street,
Maddra.

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்

ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

தும்பி

வண்டு என்று பொதுப் பெயரால் வழங்கப்படும் உயிர் வகைகள் தும்பி, சுரும்பு, மிஞிறு, தேன் எனச் சிறப்புப் பெயரால் வழங்கப்படும் வேறுபாடும் உடையனவாகக் காணப்படுகின்றன. வண்டின் முரலுதலுக்கு யாழ் ஓசையை உவமை கூறுதல் போலவே தும்பியின் ஓசைக்குக் குழலோசையை உவமை கூறுதல் உண்டு. பொன்னின் மாற்றினை உரைத்துக் காணும் கட்டளைக்கல் போன்ற கரிய நிறத்தையுடைய தும்பி ஒன்று, மூங்கிலில் சிறியதாக அமைந்த துளைவழியில் உள்புகுவதற்காகச் சுழன்று சுழன்று இனிதாக இமிர்கின்ற ஒலியானது, தட்டை வடிவாக அமைந்த தண்ணுமையின் ஒலிக்குப் பின்னர் வாத்தியக்காரன் இனிய ஆம்பலங் குழலைக்கொண்டு ஊதுகின்ற பண்ணினைப்போன்று உள்ளதாம். இதனை,

> " கட்டளை யன்ன மணிநிறத் தும்பி
> இட்டிய குயின்ற துறைவயிற் செலீஇயர்
> தட்டைத் தண்ணுமைப் பின்ன ரியவர்
> தீங்குழ லாம்பலின் இனிய இமிரும் " (ஐங்-215)

என்ற பாடற்பகுதி உணர்த்துகின்றது காண்மின். மேலும் இத் தும்பியின் ஒலி குரற்பாடலுக்கு இயைய ஊதும் இயைபு (ஒத்து) போன்று இருப்பதையுணர்ந்த புலவர்,

> " இருந்தும்பி யியைபூத " (கலி-123)

என்று கூறியுள்ளமை காண்க. இத் தும்பியின் ஒலியை வில்லில் தொடுத்துவிடும் அம்பின் ஒலிக்கு உவமேயமாகக் கூறுவதும் உண்டு.

> " விரியிணர்த் தாதுண் தும்பி முரலிசைகடுப்ப
> பரியின துயிர்க்கு மம்பினர் வெருவர " (அகநா-291)

என்பது காண்க. இத் தும்பியின் இனிய ஓசை கேட்பதற்கு இனிதாக இருத்தலின் தினைப்புனத்துக் குருவி ஒப்பும் மகளிர், உயர்ந்த மலையில் நறுமணம் வீசும் மலர் நிறைந்த வேங்கைமரக் கிளையில் கட்டியுள்ள உயர்ந்த பரணில் இருந்துகொண்டு, அவ் வேங்கை மலரில் உள்ள பொன்போன்ற நறுந்தாதினை ஊதுகின்ற தும்பியின் இனிய இசையைக் கேட்டுக்கொண்டிருந்தமையை அம்மகளிரே உணர்த்துகின்றார்கள்.

" பெருவரை யடுக்கத்துக் குரீஇ யோப்பி
ஓங்கிருஞ் சிலம்பின் ஒள்ளிணர் நறுவீ
வேங்கையால் கவட்டிடை நிவந்த இதணத்துப்
பொன்மருஞ் நறுந்தாதூதும் தும்பி
இன்னிசை ஞரா இருந்தனம் ஆக " (அகநா-388)

என்பது காண்க. இத் தும்பியின் இமிர்தலுக்கு விளரிப் பண் அமைந்த யாழ் நரம்பின் ஒலியை உவமை கூறுவதும் உண்டு.

" துவைத்தெழு தும்பித் தவிரிசை விளரி
புதைத்துவிடு நரம்பின் இம்மென இமிரும் " (அகநா-317)

என்பது காண்க. வண்டுகள் ஊதியதால் குராமலர்கள், தும்பி தேனுண்டுகொண்டிருந்த கோங்கமலரில் சிந்துகின்றன ; அக் குராமலர் தன்மேல் பட்டவுடன், தும்பி விரைந்து இம்மென ஒலி செய்துகொண்டு எழுகின்றது. தும்பியின் அந்த இம்மென ஒலியே விளரிப் பண் அமைந்த யாழ் நரம்புபோல் ஒலித்தது என்க.

" காந்த ளூதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பின் முரலும் " (நற்றி-17)

என நொச்சிநியமங்கிழார், தும்பி காந்தள் மலரில் தங்கித் தேன் உண்ட மகிழ்ச்சியால் முரன்ற ஒலி இனிய யாழ் ஒலி போன்றது என்பதை விளக்கியிருத்தல் காண்க.

ஒரு தும்பி கரிய நாவல் பழத்தைத் தன் இனம் என்று கருதி அப்பழத்தின்மேல் மொய்த்துக்கொள்கின்றது. நாவல் பழத்தைக் கவரவந்த நண்டு அத்தும்பியையும் நாவல் பழம் என்று கருதிக் கால்களால் கவர்ந்து இழுத்துக்கொண்டு செல் கின்றது. நண்டு கொண்டுசெல்லும் வழியே அதன் பலகால்

களில் அடங்கிச் செல்கின்ற தும்பி துன்பத்தால் ஒலி எழுப்பு கின்றது. அதன் துன்பப் பூசல் யாழின் குற்றமுள்ள நரம்பில் எழும் ஓசைபோல இனிமையின்றி ஒலிக்கின்றது. இரைதேடு கின்ற நாரை அவ்வழி வருகின்றது. அவ்வண்டின் ஒலியால் நாரை தன்னைக் கண்டு குத்திக் கொல்லவுங் கூடும் என்று நண்டு அத்தும்பியை விடுகின்றது. அத்தும்பியின் துன்ப ஆரவாரமும் அடங்குகின்றது.

'' புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழம் செத்து
பல்கால் அலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்திய விடுக்கும் '' (நற்றி-35)

என்பது காண்க. தும்பியின் இன்ப ஒலிக்கும் துன்ப ஒலிக்கும் யாழ் நரம்பின் ஒலியையே உவமை கூறியிருக்கும் புலவர்களின் நுண்ணறிவை எண்ணுக.

ஒரு நீலமணி போன்ற நிறத்தையுடைய தும்பி தான் இருந்து தேன் நுகர்ந்த மலர் தனிமைப்படத் தேன் வேட்டத்திற்குப் புறப் படுகின்றது. ஓரிடத்தில், வாய்வழி ஒழுகும் மதத்தையும் ஒளி வாய்ந்த கொம்பையுமுடைய ஒரு களிறும், அழகிய புள்ளிகளை யுடைய புலியும் ஒன்றை ஒன்று தாக்கிப் போர்செய்கின்றது. தேன் உண்ட மயக்கத்தோடு வேட்டம் போகிய அத்தும்பி, புள்ளிகளையுடைய புலியை வேங்கை மரத்தின் பூத்த கிளையென எண்ணி அப்புலிமீது மொய்க்கின்றது; பூப்போன்ற புள்ளிகளை யுடைய யானையின் முகத்தை மலர்ந்த மரம் எனக் கருதி அம் முகத்திலும் மொய்க்கின்றது. இவ்வாறு புலியினிடத்தும் யானை முகத்தும் மாறிமாறிச் சென்று தங்கும் தும்பியின் தோற்றம், வலிமைமிக்குக் கோபத்தால் போரில் ஒருவரை ஒருவர் கொல்லத் தொடங்கிய மன்னர் இருவரையும் உலகப் பொதுநலம் கருதி இன்சொல் பேசி நண்பர் ஆக்கக் கருதுகின்ற புலவர்போலக் காட்சியளிக்கின்றதாம். என்னே இவ்வுவமையின் ஏற்றம்! மலரைப் பிரிந்த தும்பியைப் புள்ளி நிறைந்த புலியின் தோற்றமும் புகர்முகயானையின் மதநாற்றமும் மலர்க்கிளைகளாகத் தோன்றி மயக்குகின்றன. மயங்கிய தும்பி அங்கும் இங்கு மாகத் திரிந்து தேன் நுகரவே விரைகின்றது. ஆயினும் சண்டை யிட்டுக்கொண்டிருக்கும் இரண்டு விலங்குகளுக்கு இடையில்

அத்தும்பி மாறி மாறித் தங்கும் தன்மையைக் காணின் அப் போரை நிறுத்த அது முயலுவதாகக் காணப்படுவது இயல்பு தானே ! இதைக் கபிலர் கூறுகின்றார்,

" வீயகம் புலம்ப வேட்டம் போகிய
மாஅ லஞ்சிறை மணிநிறத் தும்பி
வாயிழி கடாத்த வான்மருப் பொருத்தலோடு
ஆய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின்
வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்பொறி யானைப் புகர்முகங் குறுகியும்
வலிமிகு வேகுளியான் வாளுற்ற மன்னரை
நயனுடி நட்பாக்கும் வினைவர்போல் மறுத்தரும் "

(கலி-46)

என்றது காண்க.

ஒரு கரிய தும்பி காந்தள் மலரில் தங்கி தாது ஊதுகின்றது. பாம்பு படம் எடுத்து அசைந்து ஆடுவதுபோன்ற காந்தளின் தோற்றமும் மணி நிறமுடைய அத்தும்பியின் தோற்றமும் கண்ட பெருங்கண்ணனூர்க்குப் பாம்பு மணி உமிழ்வதுபோலக் காணப்படுகின்றது ; எனவே,

" சிலம்புடன் கமழும் அலங்குகுலைக் காந்தள்
நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியிற் றோன்றும் " (குறுந்-239)

என்று கூறியுள்ளார் அப்புலவர். பாம்பு கருமாணிக்கத்தை உமிழ்வதுண்டு. இக் காந்தள் மலரில் ஊதும் தும்பியின் தோற்றம் தங்கால் பொற்கல்லனூர்க்குப் பெண்டிர் கையில் ஆடுகின்ற வட்டுக்காய் போன்று காணப்படுகின்றது.

" காந்தள், அணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டில் தோன்றும் " (அகநா-108)

என்று புகழ்வது காண்க. மலர்களில் உள்ள தாதும் தேனும் தேர்ந்து உண்பதே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண் டுள்ளமையால் இத்தும்பி,

" கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி " (குறுந்-2)

எனப்படுதல் காண்க.

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மான்போல் விழியு மிளம்பிறைபோல்
வயங்கு நுதலுங் கனிவாயுந்
தேன்போன் மொழியுஞ் சிற்றிடையுஞ்
செம்பட் டுடையுந் திருக்கழுத்தும்
வான்போ லிருண்ட மயிர்க்குழைவு
மணிச் செப்பெனவே கனதனமுந்
தான்போ லுவமை சாற்றரிய
வுமையே சரணந் தருவாயே. 8

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தருவா யயனுர் திருமா லுணரா
வருள்செங் கமலச் சரணின்றே
யோருமா மனதா யுறவா யுருகா
துரையா தவமே யுழலுற்றேன்
றிருமா மறையே பொருளே சுவையே
சிவனு ரிடமங் கலவாழ்வே
யிருமா மலரே பரிபூ ரணமே
யேமையாள் பதமே யுமையாளே. 9

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உமையே மூலத் துறைந்தபொரு
ளுணர்ந்தே சுழுமுனை யைத்திறந்தே
யிமையோ ரறிய வரிதாகு
மேந்தா யுனது பதங்கருதி
நிமையா நாட்டத் துடன்காலை
நீட்டி முடக்கி நிலைபுகுந்து
தமையே யுணருந் தரமருளுந்
தாயே யமலன் றனிவாழ்வே. 10

வாழ்வே வாழ்வை மறந்திருந்து
மகிழ்ந்தே களிக்க வரும்வாழ்வே
சூழ்வீ ழீயைப் போன்றுமலங்
குளித்தே கிடக்குங் கோடியேனைத்
தாழ்வே யகலுங் சிவஞானச்
சரணங் கொடுக்க வேழுந்தருளாய்
மாவே ழத்தின் றிருக்கோட்டு
முலையா யுதித்த மலையாளே. 11

மலையிற் பிறந்து சிவஞான
மடுவீற் குளித்துச் சிவனிடமாய்
நிலையைப் பதிந்து யாவருக்கு
நீயே தாயாய் நிறைந்தனைத்
தலைவைத் தறிவா லுணராது
தாயே கிடந்து தயங்குகின்றேன்
கோலைவைத் துழலுங் கொடும்பாவி
யடியே னம்மை குறைதீரே. 12

குறைதீ ரும்பொரு ளிறையோ
னும்புகல் குணமே யுன்சேவியா
னிறையா ரும்படி வினவா
வேங்கணு நேகிழா வுய்ந்திடுவார்
மறையோ துங்கலை மகளே
சேந்திரு மகளே யம்பிகையே
முறையோ வேன்றுய ரறவே
சங்கரி முனியா துக்தயவோ 13

எழுசீர்க் கழிநேடிலடி யாசிரிய விருத்தம்

ஓமென் றுரைத்த பொருளாமென் றுணர்த்தியது
வூமென் றிருத்தி யதேனே
சேமங் திறக்க வருவாயென் சிரத்திலுரு
சீர்வங் தபோற்க மலமே
நாமங் தரித்த சிவயோகங் தழைத்தகோடி
நாதங் தோனித்த நடமே
வாமங் தரித்த பரபோகஞ் சுகித்தமணி
மாதங் கிசத்தி மயிலே. 14

உள்ளம் கவர் கள்வன்

திரு. வ. குகசர்மா அவர்கள்,

தெல்லிப்பழை. (சிலோன்)

மனிதரின் உள்ளம் விசித்திரமானது. மெய், வாய், கண், நாசி, செவி முதலியவற்றினுலே அலைக்கப்படுவது அழகான பொருள் கண்வழியே சென்று உள்ளத்தைக் கவர்ந்துவிடும். எப்பொழுதும் உள்ளம் கவரப்படுதலையே பார்க்கிறோம். இவ்வாறு கவரப்படுதலினுலே மக்கள் வேதனை அடைகிருர்கள். ஆனுல் ஒருவர் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டால் துன்பம் அற்றுப்போம்; அழியாத பேரின்பம் உண்டாகும். புலன்களின் கவர்ச்சிக்கு உள்ளம் அகப்படாது. யார் அந்த ஒருவர்? இறைவன் புலன்களின்வழிச் செல்லாது இடையில் நின்று கவர்ந்து செல்வதால் கள்வன் என இறைவனை அழைக்கிருர் ஞானசம்பந்தர்.

“ சராசரங்களானுன் சிவன் ” என்பது பெரியோர் வாக்கு. பகவத்கீதையில் பகவான் கூறுகிருர், “ குந்திமகனே வானில் ஒளி நான்; நீரில் சுவையும், மண்ணில் தூயநாற்றமும், தீயில் சுடரும் யான்.” சிறந்த ஞானமுள்ளவன் மனத்திலே இறைவன் வெளிப்பட்டு நிற்றல் போல இயற்கையாற் சிறப்புற்ற இடங்களில் இறைவனின் அருள்கூட இருக்கிறது. இதைக் கவனத்துள் கொண்ட மெய்ஞானத்தவமுதல்வராம் ஞானசம்பந்தர் “ உள்ளம் கவர் கள்வன் ” தங்கியுள்ள ஆலயங்களின் சூழ்நிலைகளின் தன்மையையும் ஊன்றி ஆராய்ந்தார். சூழ்நிலையும் உள்ளம் கவர்வனவாகவே இருத்தலைக் கண்டார். “ சூழ்நிலைகளே மனிதனை ஆக்குகின்றது ” என்ற நடைமுறைப் பிரமாணம் போன்று சூழ்நிலையே தெய்வத்தன்மையை உண்டாக்குவதாக அவர் கருதியிருக்கவேண்டும். அதனுற்ருன் உள்ளம் கவர் இயற்கை வருணனைகள் சம்பந்தர் தேவாரத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன.

இயற்கையையும் அங்கே உள்ள ஒழுக்கங்களையும் கொண்டு நிலத்தை நாலாக வகுப்பர் அகநூலார். பாலை என்று ஐந்தாவதாகக் கூறப்படும் நிலம் இவற்றில் நின்றும் கால வேறுபாட்டால் தோன்றியது. இவை நாலுநிலங்களிலும் உள்ள “ உள்ளம் கவர் ” காட்சிகளைச் சம்பந்தர் எடுத்துப் பாடியுள்ளார். மலையும்

மலைசார்ந்த இடமும் குறிஞ்சி என்று கூறப்படும். அங்கே சந்தனம், வேங்கை முதலிய மரங்கள் காணப்படும். திருக் குற்ருலத்தைப்பற்றிப் பாடவந்த ஞானசம்பந்தர் முதலில் வேங்கை மரத்தின் சிறப்பை வர்ணிக்கிருர்.

" வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கோம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்குற்ருலம் "

மலையின்கண்ணே குளிர்ந்த நீரையுடைய அருவிகள் பல இருக் கும். அதுவும் திருக்குற்ருல மலை அருவியின் அழகுமிக்க தல்லவா ? அந்த அருவியின் சிறப்பை,

" போதும் பொன்னுமுந்தி யருவி புடைசூழக்
கூதன்மாரி நுண்டுளி தூங்கும் குற்ருலம் "

என்று பாடுகிருர்.

காடும் காடுசார்ந்த இடமும் முல்லை நிலம் என்று கூறப் படும். காட்டில் குரங்குகள் அதிகமாக வசிக்கும். பக்கத்திலே ஒரு ஆலயம் உண்டு. அங்கே பெண்கள் வந்து வணங்கி நடமாடுவார்கள். நடமாடும்போது தாளவாத்தியமாகிய முழவு அடிக்கும். காட்டில் இருக்குங் குரங்குகட்கு முழவின் ஓசை காதில் வீழ்ந்தவுடன் முகிலின் முழக்கோவென அயிர்க்கின்றன. மரத்தின்மேலேறி முகிலைப் பார்க்கின்றன. உண்மையையறியாத மந்திகள் ஒன்றை வேருென்ருக நினைத்து மயங்குகின்றன. எங்கள் புலன்களும் அவ்வாருன தன்மையவே. புலன்களின் அறிவால் மெய்யென்றிருப்பவை எல்லாம் பொய்யாகிவிடும். இந்த நிலையைப் பட்டினத்தாரும்,

" ஐயும் தொடர்ந்து விழியும்செருகி அறிவிழந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போது "

என்று கூறினுர். கல்லாமட மந்திபோல அறிவுடைய மாந்தரும் அலக்கணுறவேண்டாம். நாம் நினைத்துத் தொழுதால் அஞ்சேல் என்று அருள இறைவன் உண்டு என எடுத்துக்காட்டுகிருர் ஞானசம்பந்தர்.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாக வஞ்சேலென்றருள் செய்வா னமருங்கோயில்

வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தியலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே ''.

முல்லைநிலத்தில் உள்ள மக்களுக்கு மந்தைமேய்த்தாலும் வேய்ங்குழல் ஊதல் முதலியனவும் தொழில்களாம். அவற்றைச் சிறப்பித்து,

'' கனைத்தமேதி காணுதாயன் கைமேற் குழலூத
அனைத்தும் சென்று திரளும் சாரல் ''

என்று பாடியுள்ளார்.

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் என்று கூறப்படும். இங்கே அன்னம் என்னும் அரசன் அரசு வீற்றிருத்தலைக் காண்கிறோம். தாமரை மலர் தவிசு, தாமரை இலை குடை, நெற்கதிர்கள் சாமரை.

''செறியிதழ்த் தாமரைத் தவிசிற் றிகழ்ந்தோங்கும் இலைக்குடை
கீழ்ச் செயயார் செங்நெல்
வெறிகதிர் சாமரை யிரட்ட யிளவன்னம் வீற்றிருக்கும்
...............மிழலையாமே ''

என்று வர்ணித்துள்ளார். சிறந்த அரசனுக்கு அன்னத்தை யுவமையாகக் கூறுவர்.

'' மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் தான்கொள்ளப் போனற்போல் ''

என்ற நளவேண்பா வடிகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மருத நிலத்திற்குரிய காந்தள் மலரும், தாமரை மலரும், சிறப்பிக்கப்பட்ட தேவாரங்கள் திருவீழிமிழலை என்னும் பதிக்குள்ளன. இத் திருப்பதியில் பேண்கள் தங்கள் பாலர்களைத் தாலாட்டுமோசை இமையவரின் உள்ளங்களைக்கூடக் கவர்ந்து விடுவதாகக் கூறப்பட்டுள்ளது.

கடலும் கடல்சூழ்ந்த இடமும் நேய்தல் என்றழைக்கப்படும். திருவான்மியூர், திருக்கோணமாமலை என்பவற்றைப் பாடும் போழுது நேய்தனிலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

"கரையுலாங் கடலிற் பொலிசங்கம் வெள்ளிப்பிவன்
றிரையுலாங் கழி மீனுகளும் திருவான்மியூர்"

எனக் கடல்படு திரவியங்களை ஒருங்கமைத்துப் பாடியுள்ளார்.

"குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை"
எனத் திருக்கோணமாமலை சிறப்பிக்கப்பட்டுள்ளது

சில இடங்களிலே ஊன்றி நோக்குவார்க்கு நல்ல பொருள் கிடைக்கக்கூடிய பாடல்கள் காணப்படுகின்றன. மக்கள் வருத்தப்பட்டு அகழ்ந்து எடுப்பதினுலேதான் பொன் வெள்ளி முதலிய சுரங்கப்பொருள்கள் கிடைக்கின்றன. துன்பம் வாழ்க்கையில் கிட்டும்போதுதான் மக்களில் அநேகர் இறைவனை நினைக்கிருர்கள். இறைவனை நினைக்கச்செய்யத் துன்பம் ஒரு சாதனமா யிருக்கிறது. "அழுத பிள்ளைதானே பால்குடிக்கும்" எக்காரணம் கொண்டும் இறைவனை நினைத்தாலும் அவர் அருள் செய்யக் காத்திருக்கிருர். மான்கள் காட்டிலே மேய்ந்துகொண்டிருக்கின்றன. மழை முகில்கள் ஒன்றுசேருகின்றன, முழங்குகின்றன. அந்த முழக்கத்தினுலே மான்கள் அச்சமடைகின்றன. அச்சமடைந்து கூட்டத்தோடும் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவண்ணுமலையைச் சரணடைகின்றன.

"தூமாமழை நின்றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணை வந்தணையும் சாரல் அண்ணுமலையாரே"

எனச் சம்பந்தர் காட்டும் காட்சி துன்பம் வந்ததும் இறைவனை அணுகும் மக்களை நினைவூட்டுகின்றது.

இறைவனுலே கவரப்படுவதின்றி உலக இன்பங்களாலே கவரப்படும் உள்ளத்திற்கு ஞானசம்பந்தர் கூறும் உவமை நவில் தோறும் நன்னயம் பயப்பது. முட்செடிகள் நிறைந்த ஓர் பற்றைக் காடு. அதனுள் ஓர் ஐந்துதலை நாகம். அந்த நாகப்பாம்பு தனக்கு இரையாக ஒரு தேரையை வாயில்பிடித்து வைத்திருக்கிறது. ஆனுல் தேரையோ அதன்வாயில் இரையாக ஒரு சிறு பறவையைத் தன் வாயில் வைத்திருக்கிறது. செடிகளினூடேயும் ஒரு சிறு வாசனைவீசும் பூ, மலருள்ளே மிகச் சிறிய அளவு தேன். மிக விரைவில் தான் தேரையின் வயிற்றிலும் தேரை பாம்பின் வயிற்றிலும் அடக்கமாகப்போவதைக் கருதாமல் சிறிய அளவு தேனை விரும்பி யுண்ணச் செல்கிறது அந்தச் சிறிய பறவை. இதுதான் பிறவியிலேற்படும் சிறிய இன்பம் என்று

எடுத்துக் காட்டுகிறூர். அப்படியா? என்று அஞ்சுகிறது விழிப்புக்கொண்ட மனம். அப்படி அஞ்சவேண்டாம்.

"முக்கண்ணடிகளாரூர் தொழுதுய்யலாம் மையல்கொண் டஞ்சல்நெஞ்சே" என்று நோயும் கூறி மருந்தும் கூறுகிறூர். அருள் அம்மையார் வடிவம் "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்' என்று இறைவனை எமக்கு அறிமுகப்படுத்துகிறூர். அருளை அம்மை உருக்கொடுத்துப் பக்கத்தில் வைத்திருக்கிறூர். "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" என்பது சித்தியார். அருள் செயலாலே அவரது கண்டம் கறுத்தது. அவர் எமது உள்ளத்தைக் கவர்ந்துகொண்டாராஞல் எமக்குச் சூரியன், சந்திரன் முதலிய நவக்கிரகங்களால் வரும் துன்பமில்லை என்று எடுத்துக் கூறுகிறூர்.

இயற்கைக் காட்சிகளுடனே இறைவனைப்பற்றிய குணங் களையுமிசைத்து நாம் செய்யவேண்டியதையும் வலியுறுத்தும் ஞானசம்பந்தரின் பாசுரங்கள் நாம் நாளும் நினைவிலே வைத்துப் போற்றவேண்டியன.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

I had the unique privilege of visiting this divine Shrine to-day and I was very much deligated to have the Darshan and worship. This day fortunately for me and my family happened to be Krithigai and it was realy splendid. The temple authorites were very courteous and the arrangements for the worship of the devoties are superb. I am also very much obliged to the guidance of the temple servants.

(Sd.) V. S. Sreenivasa Sasthiri,
Spl. Deputy Collector,
Beterment Department. 23—12—58.

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B., A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

சித்த வைத்தியமென்பது சித்தர்களால் தேவநிலையிலிருந்து அருளப்பட்டது. தமிழ்நாட்டில் பிரசித்தமான சித்தர்கள் பதினேன் பேர்கள் ஆவர். இவர்கள் மனிதர்களின் நன்மைக்காக வேதாந்தம் போதித்ததுமன்றி ''சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுதவேண்டும்'' என்னும் முதுமொழியையோட்டி எவ்விதப் பயிற்சிக்கும் சரீரம் முக்கியமாக ஆரோக்கிய நிலையில் இருக்கவேண்டுமென்ற காரணங்கொண்டு, மருத்துவமும் வெகு விரிவாகப் பொழிந்திருக்கின்றனர்.

இந்த மருத்துவர், மருந்துகள் அக்காலத்திய மனிதர்களுக்கேயன்றி எக்காலத்தவர்களுக்கும் பயன்படக்கூடியவையென்பதில் சந்தேகமில்லை. சிசுக்களுக்குப் பாலவாகடமென்றும், பால்ய, விருத்தாப்பியர்களுக்கும் பெண்களுக்கும் மருந்தளவின் நுட்பம் கூறியதுமன்றி அவரவர்கள் வயதிற்குத் தகுந்த மருந்துகளும் சொல்லியிருக்கின்றனர்.

சித்த மருத்துவத்தில் ஊடுருவிப் பார்க்குமிடத்து வியாதி வந்தபிறகு செய்யக்கூடிய மருந்துகளைக் காட்டிலும் வியாதி வராவண்ணம் உடலைத்தேற்றும் முறைகள் முக்கியமாகக் காணப்படுகின்றன.

மனிதர்கள் பிறக்கும்பொழுதே வியாதியுடன் பிறக்கின்றனர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. உதாரணமாகப் பிறந்த குழந்தைகள் கருஞ்செவாப்பு, செவாப்புக்கட்டி முதலிய கடுமையான வியாதிகளைப் பிறப்பிலேயே அனுபவித்துப் பிறந்த உடனேயே அல்லது பிறந்த சில நாட்களில் மரணமடைகின்றன. நம்முன்னோர்கள்செய்த குற்றங்களுக்காகச் சிசுக்களும் அதில் பங்கெடுக்க நேரிடுகிறது. நம் முன்னோர்களுக்கு இருந்த பல வியாதிகள் பேரன் பேர்த்தி முதலியவர்கட்குப் பரம்பரையாக வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதனை ஜன்மாந்திர வியாதி என்று நாம் கூறுவோம்.

நிற்க நாமாகவே பல வியாதிகள் நூதனமாகச் சம்பாதிக்கிறோம். நம்முடைய தேச சீதோஷ்ண நிலைக்கு மாறுபாடான

ஆகாரங்கள், பொருத்தமற்ற பழக்க வழக்கங்கள், அளவுக்கு மிஞ்சிய காமசுகங்கள், மருத்துவம் முதலியவைகளினால் பல வியாதிகள் தோன்றுவதல்லாமல் அவை ஆயுளையும் குறைக் கின்றன. தாயின் பாலில் வரக்கூடிய வியாதிகள் சில. மேற் சொன்ன அநீதியான கெட்டபழக்கங்களினால் வரக்கூடியன பல. நம்முடைய நரம்பு, எலும்பு, தசை, ரத்தம் முதலிய எல்லா அங்கங்களிலும் பரவி சரீரத்திற்கு வேண்டாப்பொருள்கள் வியாபித்து உடம்பில் பலம் இருக்கும் காலம்வரை அப்படியும் இப்படியுமாகச் சில வியாதிகள் தோன்றி வயது 40 ஆனவுடன் பல வியாதிகளாக வெளிக்கிளம்பி நம்மைப் பாடுபடுத்து கின்றன.

இருபதாவது வயதில் வெள்ளை அல்லது வெட்டை என்னும் வியாதியை ஒருவன் சம்பாதித்துக்கொள்ளுகிறான். 'வெட்டை வியாதி கட்டையுடன்' என்பதுபோல் அவ்வியாதி அச்சமயம் உபத்திரவம் உண்டுபண்ணி ஏதோ இரண்டு (injection) ஊசிகள் குத்தி மாத்திரைகள் சாப்பிட்ட பிறகு வியாதி தணிந் தாலும் அக்கொடுமையான வியாதி ரத்தத்தில் பரவி, அடி வயிற்றில் ஜாட்ராக்னியை உண்டுபண்ணி விடுகிறது. ஆனால் நோயாளி அப்போதைக்குச் சரியாகிவிட்டதென நினைக்கிறான்.

கவனியுங்கள் மேற்சொன்ன வியாதியின் கொடுமை சரீர மெல்லாம் வியாபித்துப் பல வருடங்கள் கழித்து வயிற்றில் குன்ம கட்டியாகவோ, கன்னத்தில் ஒர் புத்தாகவோ, தீராத கரப்பானாகவோ, அவதாரம் செய்கிறது. டாக்டரிடம் காட்டிய வுடன் குன்மக்கட்டிக்கு 10 ஊசிகள் போடுகிறார். குன்மக்கட்டி எதனால் உற்பவித்ததென்பதை அவர் ஆராய்ச்சி செய்யவில்லை. நோயாளியும் தன் முன்வினை அதாவது தன் வெட்டை வியாதி யால் உற்பவித்த குன்மச் சொத்தென்பதைக் கனவிலும் நினைக்க முடியாமல் இருக்கிறது. கடைசியில் ஊசிகள்குத்திய பலனையே அவன் அனுபவிக்கின்றானேயொழிய வியாதி போனபாடில்லை. அப்படியொருவேளை கொஞ்சம் அவ்வியாதி குறைந்தாலும் மூல காரணமாயிருக்கக் கூடிய வியாதி மறுபடியும் உள்ளிருந்த வண்ணமாகச் 'சூரபத்மனின் வெட்டுண்ட சிரசுகளைப்போல' பல அவதாரங்கள் எடுக்கின்றன. டாக்டர்களுக்குத் தங்கள் புத்தகங்களில் படிக்காத நூதன வியாதிகளாகத் தென்பட்டு அவர்களைத் திக்பிரமையுண்டாக்குகின்றன. ஆகையால் டாக்டர் அவர்கள் பல மருந்துகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுத்துக் கொண்டே போகிறார். அவர் அவைகளில் அலுப்படைந்து ரத்தம், எக்ஸ்ரே (புகைப்படம்) சிறுநீர், மலம், உமிழ்நீர், முதலிய பலவித பரிசோதனைகளுக்கு நோயாளியை உட்படுத்துகிறார்.

(தொடரும்)

தருமையாதீனம் குறுக்கை ஸ்ரீவீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானம்
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு
சைவப் பெருமக்கள் சார்பில்
தாழஞ்சேரி திரு. N. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
பாராட்டுரை வாசித்தளித்தல்.

தருமையாதீனம் குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம்
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை
சைவப் பெருமக்கள் வரவேற்றல்.

செய்திகள்

திருக்குறுக்கை மஹாகும்பாபிஷேகம்

தருமையாதீனத்தின் திருக்குறுக்கை தேவஸ்தானத்தில் 29—4—59 புதன்கிழமையன்று மஹாகும்பாபிஷேகம் மிக்க சிறப்புடன் நடந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது அருள்வாழ்வுக்கு இத்துடன் பதினைந்து கும்பாபிஷேகங்கள் சான்றாயுள்ளன. மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து தரிசித்துப் பக்தி வெள்ளத்தில் முழுகினர்.

தாழஞ்சேரி, திரு. N. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் வேறு பல பிரமுகர்களும் தமது கார்காத்தார் குலத்திற்குரிய பெரும் புகழ் விளங்க, தருமைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களை, நதியின் அருகிலிருந்து, எங்கும் எல்லோரும் வியந்து புகழ்ந்து போற்றும் படி விசேஷ மேளதாளங்கள் வாணவேடிக்கைகளுடன் மிகச் சீரிய வரவேற்றல் நடைபெற்றது. கைலைக் காட்சியைக் கண்ட ஆநந்தம் கண்டாரெல்லாரும் கொண்டார்கள். சைவத்திருவாளர். G. சுந்தரேசம் பிள்ளை முதலிய பிரமுகர்கள், தங்களுக்குத் தருமைக் குருஸ்வாமியிடத்தில் உள்ள பக்திப்பெருக்கை உணர்ந்து, ஏனையோரும் அதில் மிக்க நாட்டம் கொள்ள, இவ் வரவேற்பு, பெரிய துணையாயிற்று. பின் திருக்கோயில் வழிபாடு கிரமப்படி நடந்தது. சிவப்ரசாதம் குருப்ரசாதம் ஆகப் பலரும் பெற்று இன்புற்றனர் மண்டபத் தீபாராதனைக்குப்பின், திருக் காவணத்துள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு, ஷை கார்காத்தகுலசிகாமணிகள், வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். அதில், குரு மகாசந்நிதானம் செய்துவரும் திருப் பணிகளின் சிறப்புக்களை ஒரளவு குறித்திருந்தது. அப்போது எங்கும் எவரும் எக்காலத்திலும் செய்தில்லாத அளவும் பெரு மையும் அற்புதமும் ஆச்சரியமும் உடைய திருப்பணிகளையும் மகாகும்பாபிஷேகங்களையும் பாராட்டிப் போற்றினார்கள். குரு மகாசந்நிதானம் அருளிய ஆசியில், சைவ நன்மக்கள் கடமை, செல்வத்தின் பயன், சஞ்சலமில்லாத வாழ்க்கைநெறி, புராண பாராயண பலன், செல்வம், இளமை, யாக்கை என்னும் மூன்றன் நிலையாமை, பக்தியின் அவசியம், அருள்வாழ்வின் உயர்ச்சி,

ஆண்டவன் ஆட்கொள்ளும் தன்மை, இக்காலத்தில் வார வழி பாடு செய்வதன் அவசியம், சந்தியாவந்தனத்தின் அவசியம் முதலிய பற்பல அரும்பெருண்மைகளை வற்புறுத்தி ஆசீர்வதித்து அருளினார்கள். தொடக்கத்தில், திரு. G. சுந்தரேசம் பிள்ளையும் முடிவில் திரு. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளையும் முறையே வரவேற் புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். திரு. M. ஜகநாதப் பிள்ளை அவர்கள் வாழ்த்துப் பத்திரம் வாசித்தார்கள். ஸ்ரீமத். வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், மடாலயச் சார்பில் நன்றி தெரிவித்தார்கள். பின்னர்க் கும்பாபிஷேகத்திற்கு வந்த அந்தணர் முதலோர்க்குச் சம்பாவனையும் வஸ்திரதானமும் குருமணியால் அளிக்கப்பட்டன. அன்றிரவு காமதகனமூர்த்தி யோகீசுவரர் முதலிய ஏழு மூர்த்திகள் புறப்பாடு. (நாற்பது ஆண்டிற்குப் பின்பு) முதல் முதலாக நிகழும் பெரிய திருநாள் என்று பலவூர் மக்களும் தரிசித்துக் கண் பெற்ற பயனாகக் கருதி இன்புற நடந்தது. (முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.)

தருமபுரத்தில் சித்திராபௌர்ணமி

நிகழும் விகாரி ஆண்டு சித்திரைத் திங்கள் 9 ஆம் நாள் (22—4—59) புதன்கிழமையன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சண்முகப்பெருமானுக்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்தில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கும் சித்திரா பௌர்ணமியை முன்னிட்டுக் காவடி எடுக்கப்பெற்றது. மாலை 5 மணி அளவில் காவிரியிலிருந்து காவடிகள் பல குழந்தைகளால் எடுக்கப்பெற்று திருவீதிவலமாக வந்து ஸ்ரீ சண்முகப் பெருமானுக்கும், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கும் காவடி அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடை பெற்றன.

திருநாவுக்கரசர் திருவிழா

2—5—59 சனிக்கிழமை சமயாசாரியர்களுள் ஒருவரான திருநாவுக்கரசரின் திருநக்ஷத்திரத்தை முன்னிட்டு ஸ்ரீ ஞானபுரீசு வரர் ஆலயத்தில் திருநாவுக்கரசருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், இரவு திருவீதியுலாவும் சிறப்பாக நடை பெற்றன. அன்று ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் காலைமுதல் திருநாவுக்கரசர் புராணம் பாராயணம் செய்யப்பெற்றது.

தேவஸ்தானங்களில் சித்திரைத்திங்கட்பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான, சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங்களில் சித்திரைத் திங்கட் பெருவிழா 13—4—59 முதல் 22—4—59 முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நடைபெற்றது. விழாநாட்களில் இன்னிசைநிகழ்ச்சிகளும். சமயச் சொற்பொழிவுகளும் சிறந்த அறிஞர்களால் நிகழ்த்தப்பெற்றன.

திருமுறைவிழா

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 18—4—59 சனிக்கிழமை மாலை 5 மணிக்குத் திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. திருமுறைகள் யானைமீது அலங்கரிக்கப்பெற்று பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு திருவீதி வலமாகக் கொணரப்பெற்றன. தேவார வகுப்பு மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. சென்னை, திரு. ச. சிவகுமாரன், M. A. அவர்கள் "பதினோராந் திருமுறை" என்ற தலைப்பிலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர், வித்துவான். திரு. G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் "பன்னிரண்டாந் திருமுறை" என்ற தலைப்பிலும் பல சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 19-4-59 ஞாயிற்றுக்கிழமை திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. அன்று மாலை 5 மணிக்கு திருமுறைகள் யானைமீது அலங்கரிக்கப்பெற்று திருமுறைப் பாராயணத்தோடு திருவீதி வலமாகக் கொணரப்பெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. சென்னை திரு. ச. சிவகுமாரன், M.A. அவர்கள் "திருமுறை 10" அண்ணுமலைப் பல்கலைக் கழகம், தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர், வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை M.A. B.L. அவர்கள் "திருமுறை 11". தருமையாதீனப் புலவர், நாகை தேசீய உயர்பள்ளி தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் "திருமுறை 12" என்ற தலைப்புக்களில் பேசினார்கள்.

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையச் சார்பில்
மாதாந்தர சமயப் பிரசாரக் கூட்டம் துவக்கவிழா

சென்னை, தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையச் சார்பில் ஒவ்வொரு ஆங்கில மாதந்தோறும் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியூர் களில் சென்று சமயப் பிரசாரம் செய்வது என்ற நிலையத் திட்டத்தின்படி 14—4—59 விகாரி வருஷப்பிறப்பன்று காலை 10-30 மணிக்குச் சென்னையைச் சார்ந்த சைதாப்பேட்டை ஸ்ரீ காரணீசுவரர் திருக்கோயிலில் தொடக்கவிழா நடைபெற்றது. நிலயத் திருமுறை வகுப்பு ஆசிரியர் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினர். பிரசாரக் குழுவின் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் நிலம், நீர், தீ, ஆகாயம், காற்று என்ற பஞ்சபூதங்களையும், அதன்வழி குறை யிலா உடலையும் நமக்குக் கொடுத்துப் பாதுகாத்துவரும் கடவு ளுக்கு நாம் ஒரு வகையிலும வரி செலுத்தவில்லை. ஆனால் உலகத்தில் இறைவனால் தோற்றுவிக்கப்பெறும் பொருள்களை இன்னார் இவ்வளவு பெறுக என ஒழுங்குபடுத்தும் ஆட்சி முறைக்கு வரி செலுத்துகிறோம். நம்மிடம் ஒரு பொருளையும் விரும்பாது நமக்கு நலம் செய்யும் கடவுள் ஒருவர் தோன்றாத் துணையாயிருந்து வருகிறார். இதனை மக்கள் உணர்ந்து நலம் புரியும் இறைவனை நன்றிக்கு அடையாளமாக நாளும் வழி பாடாற்ற வேண்டும். அப்பொழுது நாடு செழிக்கும். இந்த அடிப் படையில் தோடங்கியிருக்கும் இப்பிரசாரப்பணி சிறப்புற நடை பெறுவதற்குச் செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் புரிவாராக என்று குறிப்பிட்டார்கள்.

விழாவிற்குத் தலைமைவகித்த சிவத்திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பேசுகையில் புத்தாண்டுத் துவக்கநாளில் ஆதீனச்சார்பில் நல்ல பணியுந்துவங்குவது மகிழ்ச்சிக்குரியது. கல்லூரிகளில் மாணவ மாணவியர்கள் நடந்துகொள்ளும் முறை மிகவும் சீர்கேடடைந்துள்ளது. சமயக் கல்வியும், அதன் வழி கடவுள் உணர்வும் எழுப்பப் பெறுமையே அதற்குக் காரணம். அரசியலார் இதனை அடிப்படையிலேயே திருத்த முன்வர வேண்டும். சந்திர மண்டலத்தையும், சுக்கிர மண்டலத்தையும்

பார்க்கச்சேல்லும் மனிதர்கள் தன்னைச் சரியாகப் பார்த்துக் கோண்டார்களா ? என்றால் இல்லை என்பதுதான் அதற்கு விடை. தன்னைச் சரியாகப் பார்த்து உணர்ந்து, அதற்கேற்ப நடப்பது தான் சமய வாழ்வு, தத்துவ வாழ்வு. 4844 பாதிரிகள் வேளி நாட்டிலிருந்து சேன்னை ராஜ்யத்திற்குமட்டும் அவர்களது கிரித்தவப் பிரசாரத்திற்காக வந்துள்ளார்கள். நாம் நமது சமயத்தைப்பற்றிக் கவலைப்படாமலேயே இருந்து வருகிறோம் இம்மாதிரி அரை நூற்றாண்டு இருந்து விடுவோமானால், ஆட்சியே அவர்களது கைக்குமாறி மீண்டும் வேளிநாட்டவர் ஆதிக்கம் வருவதற்கு இடம் உண்டாகும். அதற்கு இடம் கோடாமல், போதுமக்களும், அரசியலாரும் நமது இந்து சமயப்பண்பைப் பிரசாரம் செய்து காப்பாற்றவேண்டும். இவ்வரிய பணியை தருமையாதீனம் தக்க முறையில் தோடங்கியிருப்பது பாராட்டற் குரியது என்று கூறி இந்நன்னாளில்

"நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யார் அறிவார்
சா நாளும் வாழ்நாளும் சாய்க் காட்டெம் பெருமாற்கே
பூ நாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் சேவி கேட்ப
நா நாளும் நவின்றேத்தப் பேற லாமே நல்வினையே"

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தைச் சிந்திப்போமாக என்று உரைத்தார்கள்.

இறைவனைப்பற்றி நினையாத நாளும், பேசாத நாளும் நமது வாழ்நாளில் ஒரு நாளாக வைத்து எண்ணத்தக்க நாளல்ல, அதாவது பிறவாத நாளாகவே அந்நாள் கருதப்பெறும். என்கிறார் அப்பர் சுவாமிகள் எனப்புலவர் முருகவேள் குறிப் பிட்டார்கள். திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் சேட்டியார், திரு. சுந்தரராஜன், திரு. நாகராஜன் முதலியோரும் சமய வாழ்வின் அவசியம் பற்றியும், வழிபாட்டின் சிறப்புப் பற்றியும் பேசினார்கள்.

சிவகுமாரன் அவர்கள் சேன்னையிலும் பிற இடங்களிலும் உள்ளவர்கள் இப்பிரசாரப்பணியில் ஆங்காங்கு வந்து கலந்து கோள்ளலாம் என்றும், வசதிக்குறைவுடைய இடங்களில் தக்காரைக்கோண்டு உணவு வசதிகள் செய்து கோடுக்கப்படும் என்றும், எல்லோரும் பங்குகோள்ளும் போருட்டு முதல் மாதக் கூட்டத்திலேயே அடுத்தமாதக் கூட்டம் நடைபெறும் இடத்தை

அறிவிக்கப்படும் என்றும், கூட்டு வழிபாடும், சமயப் பண்பை மக்கள் உணரும் வகையில் பிரசாரம் செய்வதும் இப்பிரசாரக் கூட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும், 3—5—59 ஞாயிறன்று மாலை $5\frac{1}{2}$ மணிக்குத் திருமுல்லைவாயில் ஸ்ரீ மாசிலாமணீசுவரர் கோயிலில் கூட்டம் நடைபெறும் என்றும் கூறினார்கள்.

தொடக்கவிழாவிற்கு கனம், இராஜாஜி அவர்கள் அனுப்பிய ஆசிச்செய்தியை ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வாசித்து அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்கள். இராஜாஜி அவர்களின் ஆசிச்செய்தி வருமாறு.

தருமபுர ஆதீனத்தின் சென்னை நிலையத்தார் செய்யப்புகும் பக்திப் பிரசாரம் ஓங்கி வளர்க. சமய பேதங்களைப் பொருட் படுத்தாமல் பக்திப் போதுப்பிரசாரம் நன்கு நடைபெற்று சீலமும் தருமமும் நாட்டில் வளர்ந்து மக்கள் வாழ்க்கை செழிப்படைக அறநெறி வாழ்க. நான் நேரில் முதல்நாள் வந்து கலந்துகொள்ள உடல்நிலை இடம் தரவில்லை.

(ஒ-ம்.) இராஜகோபாலாச்சாரி.

14—4—59.

3—5—59 மாலை 5-30 மணிக்குத் திருமுல்லைவாயில் கோயிலில் வழிபாட்டுக் கூட்டம் தொடங்கியது. பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஸ்ரீ மாசிலாமணீசுவரர் சந்நிதியிலும், கோடியிடைநாயகி சந்நிதியிலும் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அவ்வூர் தேவாரப் பதிகத்தை எல்லோரும் இறைவழிபாட்டில் ஈடுபடுமாறு இசையுடன் ஓதினார்கள். சென்னை கார்ப்பரேஷன் டிப்டி கமிஷனர், திரு. N. சங்கரன் அவர்கள், 'சமயப்பண்பும், ஒழுக்கமும்' மக்கள் வாழ்க்கையில் பரவவேண்டும். அதற்கு ஆதீனம் தொடங்கியிருக்கும் இப்பிரசாரமுறை பெரிதும் பயன் தரும். சமயாசாரியர்கள் இம்முறையில்தான் மக்களுடன் பழகி அவர்களை அருள்நெறிப் பாதையில் திருப்பினார்கள். நாமும் அந்நெறியே செல்வோமாக என்று கூறினார்கள்.

சென்னை 8-வது மாகாண மாஜிஸ்டிரேட், உயர்திரு. ஆவுடைநாயகம் பிள்ளை அவர்கள், பக்தியின் அவசியத்தையும்,

(தொடர்ச்சி பக்கம் 420 இல் பார்க்க)

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே, முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஹூ வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)
(15—5—59 முதல் 14—6—59 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி 1, 2 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். தொழில் மாறும். அசுவதி 3, 4 பாதங்கள் ரோகத்தையும் அப்வாதத்தையும் உண்டுபண்ணும். பரணி முதல் பாதம் சுபமாகும். மற்ற 2, 3, 4 பாதங்கள் சமபலனைத்தரும். கார்த்திகை முதல் பாதம் அதிக விரயத்தையும் ரோகத்தையும் உண்டுபண்ணும். புதன், சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் இடம் மாறச்செய்யும். தொழில் மாறும். சில்லரை திருட்டுப்பயங்கள் ஏற்படும். ரோஹிணி நான்கு பாதங்களும், தொழில் ஏற்றத்தையும் பெரியோர் அன்பையும் உண்டுபண்ணும். மிருகசிரிஷம் 1, 2 பாதங்கள் அதிக செலவினங்களையும் சிறு நஷ்டங்களையும் கவலைகளையும் தரும். தொழில் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசிரிஷம் 3, 4 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். தூரப் பிரயாணம் ஏற்படும். திருவாதிரை நான்கு பாதங்களும் கவலை நீங்கிச் சுப முண்டுபண்ணும். தொழில் ஓங்கும். புனர்பூசம் 1, 2 3 பாதங்கள் கீர்த்தியைத்தரும். குடும்பம் விருத்தியாகும். சந்தோஷம் கிடைக்கும். சத்துருக்கள் ஒடி விடுவார்கள். நஷ்டமான பொருள் வரத்து ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

4; கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4-ம் பாதம் வித்யாவிருத்தியையும் ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணும். பூசம் நான்கு பாதங்களும் ஜயத்தைத்

யும் லாபத்தையும் தரும். குடும்பத்தொல்லைகள் ஏற்படும். ஆனாலும் சுபமாகும். ஆயில்யம் நான்கு பாதங்களும் விவசாயப் பெருக்கத்தையும், தொழில் லாபத்தையும், ஜயத்தையும், பெரியோர் அன்பையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும், குடும்ப சுகத்தைத் தரும். பெரியோர் அன்பு ஏற்படும். தொழில் ஓங்கும். பூரம் நான்கு பாதங்களும் லாபத்தைத் தந்து வியாதி பயத்தையும் வீண் செலவுகளையும் உண்டுபண்ணும். உத்திரம் முதல் பாதம், தூரப் பிரயாணத்தைத் தரும். இடம் மாறும். சுபஜீவனம் கிடைக்கும். சனி, வியாழன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் தெய்வபலத்தைத்தரும். நன் மதிப்பு உண்டுபண்ணும். உத்யோகலாபம். ஏற்படும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் சுபசந்தோஷத்தைத் தரும். வியாதி நீங்கி சுபமுண்டாகும். குடும்ப சுகம் ஏற்படும். சபாபூஜ்யத்துவமும் ராஜசுகபோகங்களும், சத்திர சாமாவைபவங்களும், கீர்த்தியும் உண்டாகும். சித்திரை 1. 2 பாதங்கள், வித்யாலாபம் குடும்ப சுகம், ஜயம், கீர்த்தி பிரதாபம் முதலிய நன்மைகளைத் தரும். சந்தோஷம் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களையும் தொழில் பங்கத்தையும் தரும். சுவாதி நான்கு பாதங்களும் ஆரோக்கியத்தையும், தனலாபத்தையும், தெய்வபலத்தையும் தரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் வீண் அலைச்சலையும் நஷ்டத்தையும் உண்டு பண்ணும். தெய்வபலம் குறைந்துகாட்டும். குடும்பத்தொல்லை அதிகப்படும். கடன் ஏற்படச்செய்யும், வெள்ளி சனி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம்பாதம் தூரசஞ்சாரத்தையும் புண்ணிய தீர்த்தாடனங்களையும் தரும். அனுஷம் நான்கு பாதங்களும்

உத்யோகலாபத்தோடு இடம் மாறச்செய்யும். வியாபாரம் ஓங்கும். கேட்டை நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்கியம் ஏற்படும். குடும்பத்தொல்லையோடு குடும்ப சுகத்தையும் தரும். நூதன ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும் புதன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் மிசிரபலத்தைத் தரும். குடும்பம் ஓங்கும். பூராடம் நான்கு பாதங்களும் தெய்வீக சக்தியைத் தந்து சந்தோஷம் உண்டுபண்ணும். உத்யோகத்தில் எதிர் பாராத பிரமோஷன் கிடைக்கும். நல்ல சர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கச்செய்யும். உத்திராடம் முதல்பாதம் ஆரோக்கியத்தைத் தந்து குடும்ப சுகத்தையும் தரும். தனலாபம் ஏற்படும், பந்து மித்திர கல்யாண வைபவங்களையும், சந்தோஷத்தையும் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் சுபமே தரும். லாபம் ஏற்படச் செய்யும். உத்யோக லாபமும், சபாபூஜ்யத்துவமும் ஏற்படும். நஷ்டமான பொருள்வரத்து ஏற்படும். குடும்பசுகம் ஏற்படச் செய்யும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். வியாழன், சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் அதிக செலவுகளைத்தரும். தூரப் பிரயாணத்தைத் தரும். குடும்ப சுகம் ஏற்படும். சதயம் நான்கு பாதங்களும் பதவியைக் குறைக்கும். சத்துரு விருத்தி ஏற்படும். கடன் வளரும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் இல்லற சுக போகங்களையும் தனதான்ய லாபங்களையும், ஆடையாபரணச் சேர்க்கைகளையும் உண்டுபண்ணும். புதன், சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4-ம் பாதம் வியாதியைத் தரும். காரியங்கள் விக்னமாகும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் ராஜாங்க

மைத்திரத்தையும், லாபத்தையும், குடும்ப சுகத்தையும் தரும். ரேவதி நான்கு பாதங்களும் ஜயத்தை உண்டுபண்ணும். நஷ்டமான பொருள் வந்துசேரும். உத்யோகம் மேன்மையடையும். குடும்ப சுகம் ஏற்படும். மனம் சந்தோஷமடையும். தெய்வ பலம் கிட்டும். புதன், வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு:- ஷ மாதமும் உலகில் அடிக்கடி பல மாறுதல்களை உண்டுபண்ணும். மலைப் பிரதேசங்களில் ஹிமாலய பிரதேசத்தில் அதிக மழையால் சேதமும், பூகம்பாதி பயங்களும் ஏற்படச் செய்யும். அமைதி குறைவாகவே இருக்கும். இயற்கையும் சரியாய் இராது. ஆகையால் சாதுக்களுடைய தபோபலத்தாலும், தெய்வ சக்தியாலும் மேற்கண்ட தோஷங்கள் விலகி உலகம் சுபிக்ஷமடையும்.

(416 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

புராண இதிகாசங்களின் மேன்மையையும் எடுத்துரைத்தார்கள். சென்னை கௌரவ மாஜிஸ்டிரேட் திரு. V. M. கடிகாசலம் அவர்கள், நல்லவர்களது உறவும், இறைவன் பூசையில் நேசமும் கொண்டு வாழ்வதே வாழ்வாகும் என்று கூறினார்கள். திரு. V. பாலசுந்தரக்குருக்கள் திரு. ச. சிவகுமாரன், நிலையத்தொண்டர் நடராஜன் முதலியவர்களும் தெய்வப்பணியின் சிறப்புப்பற்றி பேசினார்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

அடுத்தமாத வழிபாட்டுக் கூட்டம்

ஜூன் மாதம் 7-ம் தேதி மாலை 5-30 மணிக்கு பூந்தமல்லி என வழங்கும் பூவிந்தவல்லிக்கு அண்மையிலுள்ளதும், திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றதும், தொண்டைநாட்டு 32 சிவ தலங்களுள் 23-வது தலமாக விளங்குவதுமான திருவேர்காட்டில், வேர்காட்டுநாதர் திருக்கோயிலில் நடைபெறும். அனைவரும் வந்து கலந்துகொள்வார்களாக.

திருவெம்பாவை மாநாட்டின் நிறைவுநாளன்று தலைமைவகித்த
கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிறார்கள்.

வேளூர்ப் பிரசாதத்தையும், ஆதீனப்பிரசாதத்தையும்
தலைவர் முதலியவர்களுக்கு வழங்குதல்



மேற்குத் திருமுகத்தில் (நந்திகும்பா) சிவலிங்கப் பிரதிஷ்டை



லிப்புத்தடாகக் கணவாய் 17,500 அடி



மிலம் பனிப்பாறைப் படிவு (Glacier) கௌரி கங்கை உற்பத்தி